தி/பள்ளிக்குடியிருப்பு

அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Magenthirarajah Cultural officer

உ

கணபதி துணை

தி/பள்ளிக்குடியிருப்பு

அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

(25.02.2000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உ

கணபதி துணை

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயேத்
சர்வ விக்னோப சாந்தயே !

வெண்மையான ஆடை அணிந்தவரும்,
நன்மையைக் கொடுப்பவரும்
சந்திரனுடைய நிறம் உடையவரும்
நான்கு கைகள் உடையவரும்
நல்ல காந்தி உடைய முகத்தை உடையவரும்
எல்லா இடையூறுகளையும் நீக்குபவருமாகிய
விநாயகரை தியானிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை







## தி/பள்ளிக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயப் புனராவர்த்தன அஷ்ட பந்தன

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

"ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே"

மெய்யடியார்களே!

தட்சண கைலாசம் எனச் சிறப்புற்று விளங்கும் ஈழமணித் திருநாட்டின் கிழக்கே கோணநாதர் அமர்ந்து அருள் கொடுக்கும் திருகோணமலை மாவட்டத்தின் திருவருட் செல்வங்கள் பொழிகின்ற பள்ளிக்குடியிருப்பு என்னும் கிராமத்திற் பல்லாண்டு காலமாகக் கோயில் கொண்டெழுந்தருளி அடியார்களுக்கு இடுக்கண் களைந்து இஷ்ட சித்திகளை அருளிக் கொண்டிருக்கும் ஸ்ரீ சித்தி விநாயகருக்கும் பரிவார மூர்த்திகளாக இருக்கும் வள்ளி தேவயானி சமேத சுப்பிரமணியர் – மூஷிகம், பலிபீடம், வைரவர் ஆகிய பரிவார மூர்த்திகட்கும் நிகழும் புத்தாயிரமாண்டு பிரமாதி வருஷம் மாசித் திங்கள் 13ஆம் நாள் (2000.02.25) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 10 மணி 41 நிமிடம் வரையுள்ள சுவாதி நட்சத்திரமும், சித்த யோகமும், மேட லக்கினமும் கூடிய சுப முகூர்த்த வேளையிற் திருக்குடமுழுக்குச் செய்வதற்கு எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருட் பாலித்துள்ளது எனவே அடியார்கள் அனைவரும் அவ்வேளையிலும் அதற்கு முன்னும் பின்னும் நடைபெறும் கிரியைகளிற் கலந்து கொண்டு எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருள் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## கிரியா கால நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| மாசி மாதம் 9 ஆம் நாள் (2000.02.21) திங்கட்கிழமை | மாலை 6.00 மணி தொடக்கம் ஆசார்யா வர்ணம், விநாயக வழிபாடு புண்ணியாக வாசனம், அனுஞ்ஞை, திரவியசுத்தி, திரவிய பாகம், கிராம சாந்தி, பிரவேசபலி, வாஸ்து சாந்தி, ரட்ஷோக்கன ஹோமம் முதலியன. |
| மாசி மாதம் 10 ஆம் நாள் (2000.02.22) செவ்வாய்க்கிழமை | காலை 6.00 மணி முதல் புண்ணியாக வாசனம், கணபதி ஹோமம், சூர்யாக்கினி சங்கிரணம், யாந்திராபிஷேகம், நவக்கிரக மகம் முதலியன. மாலை 5.00 மணி முதல் ஆசார்ய விஷேட சாந்தி, பேரிதாடனம், மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம், கங்கா பூசை, கடஸ்தானம், கலாகர்ஷணம் முதலியன. |
| மாசி மாதம் 11 ஆம் நாள் (2000.02.23) புதன்கிழமை | காலை 6.00 மணி முதல் யாகபூசை, பஞ்ச முகார்ச்சனை, வேத தோத்திர திருமுறைப் பாராயணம், தாமிஸ்தாபனம், புதிய மூர்த்திகள் பூர்வாங்க கிரியைகள் மாலை 4.00 மணி முதல் யாக பூசை, பஞ்சமுகார்ச்சனை, வேத தோத்திர திருமுறைப் பாராயணம், தீபஸ் தானம் ரத்ன நியாசம், யந்திரஸ்தாபனம், பிரம்பஸ் தாபனம், அஷ்ட பந்தனம் முதலியன. |
| மாசி மாதம் 12 ஆம் நாள் (2000.02.24) வியாழக்கிழமை | காலை 6.00 மணி முதல், புண்ணியாக வாசனம், தைலாப்பியாங்கம் யாக பூசை, பஞ்ச முகார்ச்சனை, வேத தோத்திர திருமுறைப் பாராயணம், மாலை 5.00 மணி முதல் விஷேட பஞ்ச கௌவ்ய பூசை, பிரதிமா சுத்தி, மூர்த்திகள் ரக்ஷாபந்தனம் நியாசங்கள், யாகபூசை, விசேட திரவிய ஹோமம், திரிசதி ஹோமம், பூர்வ பச்சிம சந்தானம், விசேட தீபாராதனை, பஞ்சமுகார்ச்சனை வேத தோத்திர திருமுறைப் பாராயணம் முதலியன |
| மாசி மாதம் 13 ஆம் நாள் (2000.02.25) வெள்ளிக்கிழமை | காலை 6.00 மணிமுதல் யாகபூசை, மஹாபூர்ணாகுதி, தேவஸ் தோத்திர நாதகீதாஞ்சலி, ஆசீர்வாத திருமுறைப் பாராயணம், யாத்திராதி தானங்கள், தூபி அபிஷேகம், கலை 9.00 மணிமுதல் 10 மணி 41 நிமிடம் வரையுள்ள சுவாதி நட்சத்திரமும், சித்தயோகமும், மேட லக்கினமும், கூடியசுபமுகூர்த்த வேளையிற் பிரதான கும்பம் வேத, நாத கீத திருமுறைப் பாராயணம் முழங்க வீதியுலா வந்து மஹா கும்பாபிஷேகம் நிகழும். தொடர்ந்து கௌதுகபந்தனம், திருக்கதவு திறத்தல், தசதர்சனம், எஜமானபிஷேகம் பகல் 12.00 மணிக்கு மஹாபிஷேகம், விஷேட பூசை, வேதஸ்தோத்திர ஆசீர்வாத திருமுறைப் பாராயணம். பிரதமகுரு ஆசியுரை, அருட்பிரசாதம் வழங்கல். |

*எண்ணெய்க் காப்பு (2000.02.24) வியாழக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல்*

பிரதம அதிதி : ஸ்ரீமத் ஸ்வாமி தந்திரதேவா மகராஜ் (தலைவர், இந்து சமய அபிவிருத்திச் சபை)

### குருமார் விபரம்

பிரதிஷ்டா பிரதம குரு
சிவாகம கிரியா ஜோதி. விக்நேஸ்வர
பூஜா துரந்தர்
சிவஸ்ரீ. கி. சீதாராம் குருக்கள்
(ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய பிரதம குரு சம்பூர்)

சர்வசாதகாசிரியர்
சிவஸ்ரீ. மு. கு. சச்சிதானந்தக் குருக்கள்
(ஸ்ரீ கலுதாவளைப் பிள்ளையார் ஆலயம்
ஓந்தாச்சிமடப் பிள்ளையார் ஆலயபிரதம குரு மட்டக்களப்பு)

சிவஸ்ரீ. வ. கு. யோகராசா குருக்கள்
(ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயபிரதமகுரு
குருமண்வெளி மட்டக்களப்பு)

ஆலய குரு
சிவஸ்ரீ. கி. சிவானந்த சர்மா
(பள்ளிக்குடியிருப்பு)

வேத தோத்திர பாராயணம்
சிவஸ்ரீ. தெ. கு. ஜனேந்திர சர்மா
(ஸ்ரீ மஹாவிஷ்ணு ஆலயம் – திருப்பழுகாம் மட்டக்களப்பு)

சிவஸ்ரீ. சிறீகாந்தன்
(துர்க்கை அம்பாள் ஆலய ஆதீன கர்த்தா
உவர்மலை, திருகோணமலை)

சிவஸ்ரீ. சி. ஆனந்தராஜா சர்மா
(முத்துமாரியம்மன் ஆலயகுரு
கிளிவெட்டி)

சிற்ப வேலை : மார்க்கண்டு - கான்டீபன் கொலட் லேன். மட்டக்களப்பு - செல்வநாயகம் சுரேஷ்குமார் 7ஆம் வட்டாரம் சம்பூர். வர்ண வேலை : து. ஜெகதீஸ்வரன் குழுவினர்

முருகன் ஆலய திருப்பணி : அமரர். சித்திராவி கந்தையா சின்னமணி ஆகியோரின் ஞாபகார்த்தமாக ஸ்தாபிக்கப்பட்டு குடும்பத்தினர் சார்பில் கந்தையா தவராசா அவர்களினால் ஆலய நிர்வாகத்தினிடம் 20.02.2000ம் ஆண்டு கையளிக்கப் படுகின்றது.

குறிப்பு : கும்பாபிஷேக காலங்களில் அபிஷேகத்துக்குரிய பால், தயிர், நெய், தேன், பழவகை, கரும்பு, இளநீர், பூ, பூமாலை, ஆகியவற்றை அடியார்கள் ஒப்படைக்கும் பட்சத்தில் அன்புடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

21.02.2000

சுபம்

*இவ்வண்ணம்*
ஆலய பரிபாலன சபை - பள்ளிக்குடியிருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக
# நிர்வாக சபை

| | | |
|---|---|---|
| தலைவர் | : | சிவக்கொழுந்து பாக்கியராசா |
| செயலாளர் | : | சிவலிங்கம் விஜயராசா |
| பொருளாளர் | : | கணபதிப்பிள்ளை குணசேகரம் (ஆலய பொருளாளர்) |
| கும்பாபிஷேகப் பொருளாளர் | : | செல்வராசா ரவிக்குமார் |
| கணக்காய்வாளர் | : | ஆறுமுகம் நேசதுரை. கணபதிப்பிள்ளை இளம்செழியன். |
| கும்பாபிஷேக பிரதமகுரு | : | சிவஸ்ரீ க. கு. சீதாராம் குருக்கள் |
| ஆலய பூசகர் | : | சிவஸ்ரீ கிருஸ்ணபிள்ளை சிவானந்த சர்மா |
| சிலைவேலை | : | மார்க்கண்டு காண்டீபன் (அராலியூர்) |
| நிர்மாணவேலை | : | செல்வநாயகம் சுரேஸ்குமார் (குழுவினர், சம்பூர்) |

## நிர்வாக உறுப்பினர்கள்

| | *பெயர்* | | *குடிகள்* |
|---|---|---|---|
| 1. | நல்லதம்பி விஜயகுமார் | – | வெள்ளக்குடி |
| 2. | செல்லப்பா சண்முகராசா | – | ஆசாரிகுடி |
| 3. | கனகர் தங்கவடிவேல் | – | ஏகநாதி நாயனார் குடி |
| 4. | தம்பிப்பிள்ளை சிவப்பிரகாசம் | – | மாலயன் குடி |
| 5. | வைரமுத்து தில்லையம்பலம் | – | ஆழவந்தார் குடி |
| 6. | ஆரியத்தம்பி மனுராசலிங்கம் | – | வில்வராசன் குடி |
| 7. | சிவலிங்கம் விஜயராசா | – | படைத்தார் குடி |
| 8. | கணபதிப்பிள்ளை குணசேகரம் | – | தோப்பிச்சிக் குடி |
| 9. | சிவக்கொழுந்து பாக்கியராசா | – | உமண குடி |
| 10. | சித்திரவேல் தெய்வேந்திரம் | – | குடியிருப்பு குடி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமய அபிவிருத்திச் சங்க தலைவர்

# ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா மகராஜ் அவர்களின்

## ஆசியுரை



இந்து ஆலயங்களில் ஒலிபெருக்கிகளில் பக்தர்களின் பக்திப் பாடல்களே ஒலிக்க வேண்டும். பஜனைகள் கேட்க வேண்டும். இதற்கே ஒலிபெருக்கிகள் பயன்படவேண்டும். மாறாக ஒலிபெருக்கிகளில் ஒலிநாடாக்களின் இசை மட்டும் பெரும்பாலான ஆலயங்களில் ஒலிபரப்பாகின்றன. கடவுளுடைய புனித நாமங்களைச் சொல்வதற்கு நாங்கள் வெட்கப்பட வேண்டியது இல்லை. பஜனைகள் மற்றும் ஆலய மணியோசை, மந்திர ஒசை போன்றவை மனிதனைக் காப்பாற்றும். ஆயினும் சில மனிதர்கள் கடவுளின் புனித நாமப்பாடல்களைப் பாடவிரும்புவதில்லை. ஆனால் இவர்கள் ஆபத்துக்கள் நேர்ந்த வேளையில் பாதுகாப்புத் தேடி உடனடியாகக் 'கடவுளே' என்று கத்திக் கொள்வார்கள்.

ஆதி சங்கரர் இஷ்டதெய்வ தத்துவத்தை ஸ்தாபித்தவர். அதாவது சிவன், சக்தி, விஷ்ணு, கணபதி, சுப்பிரமணியர், சூரியன் போன்ற தெய்வங்களே விரும்பிய வழிபாடாகும். இந்த உருவங்கள் எல்லாமே ஒன்றுதான். ஒரு மனிதன் வெவ்வேறு நேரங்களில் வேறு விதமான உடைகளை மாறி மாறி அணிகின்றான். ஆயினும் அம்மனிதன் ஒரே ஆளாகத்தான் இருப்பான். இந்து சமயத்திலும் ஒரேயொரு தெய்வம்தான் உண்டு. ஆனால் பல உருவிலும் தோற்றமளிப்பார். சில சமயங்களில் சொல்கிறார்கள் உருவ வழிபாடு கூடாது என்று. ஆயினும் அந்த சமய பக்தர்கள் நெற்றியிலே உருவ வழிபாடு செய்கிறார்கள். கல், சிமெந்து கொண்டு வடித்த உருவங்கள் மற்றும் நெற்றியில் வைக்கப்பட்ட உருவங்கள் எல்லாம் மனத்தை ஒருமுகப் படுத்துவதற்கு அனுகூலமானவை.

மனிதனுக்கு இறை விசுவாசம் அசையாத மாதிரி இருக்கவேண்டும். "பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்" என்பன போன்ற பாடல்களைப் பாடுகின்றோம். பிள்ளையார் கொடுத்தால் பெருமைவாய்ந்த பிள்ளையார் என்று பாடமாட்டோம்.

மனம் தூய்மைப்படுவதற்காக நாங்கள் இறைவனைத் துதி செய்ய வேண்டும். சனி, வியாழன் போன்ற கிரகங்கள் மாறலாம். எங்கள் விசுவாசம் அசையாமல் இருக்கவேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவிதமான ஆசீர்வாதங்களும் வந்து சேரும்.

இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் இசையுடன் இந்து மத வழிபாடுகளை மதிக்கவேண்டும். இதுபோன்று இளைஞர்கள் சமய அறிவு வளர்க்கும் சந்தர்ப்பங்களை மதிக்க வேண்டும். உலகத்தில் பணக்காரன், சொத்துள்ளவன், பெரிய உத்தியோகஸ்தர் முதலிய பதவி இருந்தால் மட்டும் மனஅமைதி கொடுக்கமுடியாது.

எல்லா ஜீவராசிகளும் வழிபாடு மேற்கொள்ளவேண்டும்.மாணவர்கள் கிருஷ்ணலீலைகள் பற்றித் தெரியாமல், நால்வர்களின் சரித்திரங்கள் பற்றித் தெரியாமல், அம்மாணவர்களுடைய நெற்றியில் விபூதி பூசுவது பிரயோசனம் இல்லாமற் போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் பெரியவர்கள் வேதாந்த அல்லது சித்தாந்த அடிப்படைக் கோட்பாடுகள் தெரியாவிட்டால் அவர்கள் "நான் ஒரு இந்து" என்று சொல்வதில் பிரயோசனமில்லாமலிருக்கும். சகல இந்து மாணவர்களையும் குறைந்த பட்சம் வாரந்தோறும் ஒரு முறை பஜனை, சமய வகுப்புகளுடன் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும். தற்காலத்தில் ஏராளமான இந்து ஆலயங்களில் இவ்வாறான நடைமுறைகள் இடம் பெறவில்லை என்பது ஒரு பெரிய குறைபாடாகும். சில ஆலயங்களில் பிரதான விடயம் பொங்கல் பானை போல் தெரிகிறது. ஆலய அர்ச்சகர் பிரார்த்தனை மந்திரங்கள் ஓதுவார்கள், ஏனையவர்களிடமிருந்து எந்த விதமான பிராத்தனைகளையும் காணமுடியவில்லை. பழங்காலத்தில் ஔவையார் "விநாயகர் அகவல்" இயற்றினார். ஆனால் தற்காலத்தில் சில பக்தர்கள் அத்துடன் நிறைய மாணவர்கள் "விநாயகர் அகப்பை" க்குத்தான் முக்கிய இடம் கொடுக்கிறார்கள். இச்சூழ்நிலை மாற்றப்பட வேண்டியுள்ளது. உண்மையான வழிபாட்டிற்காக ஆலயத்திற்கு நாம் செல்ல வேண்டும். அதற்குப் பின் பிரசாதம் பெற்றுக் கொண்டால் தீமை இல்லை. ஒரு நல்ல பூசாரி இசை மூலம் பக்தியை ஊக்குவிப்பார்.

*சங்கா பாஜை கந்தா பாஜை*
*பாஜை பாஜை கரத்தாளா*
*மதுரா மிருதங்க பாஜை*
*பரம ரசாலா*

அதாவது சங்குடன் மணியுடன் தாளத்துடன் இனிமையான மிருதங்க ஓசையுடன் வணங்குகிறோம். இவ்வழிபாடு மிக ரசனையானது. குடும்ப ஒற்றுமையை விரும்பும் அங்கத்தவர்கள் சேர்ந்து பிரார்த்தனை செய்தால் நல்லது. பெற்றோர்கள் உதாரண சீலர்களாக முன்நின்று குடும்ப பஜனை நடத்துதல் சிறப்பானது.

சில பெற்றோர்கள் மாணவர்களைப் பஜனை நிகழ்சகளில் கலந்து கொள்வதற்கு நேரமில்லை என்று குறிப்பிடுகிறார்கள். இவ்வாறான வேஷத்தால் இந்து மதம் பாதிக்கப்பட்டுள்ளது. பஜனை செய்வதன் நோக்கம் மாமுனிவர்கள் சந்நியாசிகள் ஆகவேண்டும் என்பது அல்ல. எல்லா இந்துக்களும் ஆசாரமுறையில் ஜீவிக்க வேண்டும் என்பது தான். வாழ்க்கை முறையுடன் மௌனதியானம், மாலையுடன் நாம ஜெபம், கீர்த்தனம் போன்ற பழக்கங்கள் வேண்டும். பஜனை என்ற சொல் பஜ – வழிபாடு, ஜன – மக்கள் அதாவது மக்கள் கடவுளை வழிபடுதல் என்று பொருள்படும். பஜனையின் பெயர் கீர்த்தனம். அதாவது கடவுளுக்கு கீர்த்தி கொடுத்தல். நகர சங்கீர்த்தனம் என்பது வீதி வீதியாகப் பஜனை செய்வது.

பக்தியோக தத்துவம் ரீதியாக வைஷ்ணவ சம்பிரதாயங்களைப் பொறுத்தவரை ஒன்பது வழிபாட்டு அம்சங்கள் அடங்கியுள்ளன. சிரவண விஷ்ணு அவதாரங்களின் புனிதக் கதைகள் கேட்க வேண்டும். கீர்த்தனை கடவுள்மீது புகழ்பாடுதல், அதாவது பஜனை செய்ய வேண்டும். ஸ்மரண – இறைவனின் நினைவு. வந்தனை வணங்க வேண்டும். பாதசேவன – விஷ்ணுவின் பாதத்துக்குச் சேவை செய்ய வேண்டும். தாஸ்ய – புனித தொண்டு செய்ய வேண்டும். பஜனை – அவதார ரூபங்களுக்கு ஆராதனை செய்யவேண்டும். சகிஜன – இறைவனுடைய நண்பன் போலிருக்கவேண்டும். ஆதம நிவேதனம் என்பது முழு வாழ்க்கையையும் கடவுளுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

சிரவண கீர்த்தன மிகத் தொடர்புள்ளது. நாங்கள் எல்லோரும் ஒருமுறை கடுமையான வெந்நீர் குடித்தால் நாக்கு அவிபட்டதை அனுபவிக்கிறோம். பின்னர் சாப்பிடுகின்ற உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவையாக இருப்பது இல்லை. ஆயினும் பசி காரணத்தால் சமாளித்துச் சாப்பிடுகிறோம். இவ்வகையில் சில பக்தர்கள் பஜனை செய்கிறார்கள். அதாவது எதைப்பற்றிப் பாடினார்கள் என்பதை ஒன்றும் புரிந்து கொள்வது இல்லை. சில நேரம் பாடும்போது பகவானின் நாமத்தின் அளவு புரிந்து கொள்வதில்லை. இது அவிந்த நாக்குடன் உண்ணுவது போன்றது. எனவே கீர்த்தனை செய்வதில் மேலான நன்மைகளை விரும்பினால் முதலில் சிரவணம் வேண்டும். உதாரணமாக ஒரு பக்தன் மண்ணையுண்ட கண்ணனாம் என்பது என்ன சம்பவம் பற்றியது? பாலகிருக்ஷ்ணன் பலராமனுடன் விளையாடும் போது யசோதை கண்ணனுடைய வாயுள்ளே உலகத்தைப் பார்த்தார் என்பது பற்றியது. நச்சுப்பாம்பு மீதிலே என்பது என்ன? கோபாலன் யமுனை நதியிலே காலிங்கன் என்னும் பாம்பு மீதிலே நடனம் ஆடினான் என்பதாகும். சைவத்தைப் பொறுத்தவரை திருஞானசம்பந்தர் 'கோளறு திருபதிகம்' எதற்காகப் பாடினார்? திருநாவுக்கரசு நாயனார் 'சலம் பூவொடு தூபம்' எதற்காகப் பாடினார்? இக்கதைகள் தெரிந்திருந்தால் அந்தப் பஜனைகள் அத்தேவாரங்கள் ஒரு கூடிய சந்தோஷமான உயர்ந்த பலனைத் தரும். ஆகையினால் சிரவணமூலம் கீர்த்தனை செய்தல் ஒரு மேலான பயனுடையதாகும்.

ஆலய பூசாரிகள் பூஜைக் கடமையை மட்டும் மேற்கொள்ள வேண்டாம். அப்பூசாரி குடுமி அணிந்து ருத்திராட்சம் அணிந்து காயத்திரி மந்திரத்தை தினமும் ஜெபிக்கிறாரா, மேலும் நித்திய பூஜையுடன் பஜனை அறநெறி வகுப்புகள், பக்தி உபந்நியாசங்கள் முதலியனவற்றை ஊக்குவிக்கிறார். அவர் ஒரு வைதீக ஐயர். ஆனாலும் அப்பூசாரி பூஜை மட்டுமே மேற்கொள்ளுகின்றார் – பஜனை பக்தி பிரச்சாரம் முதலியனவற்றை ஊக்குவிக்கவில்லை. ஆகவே அப்பூசாரி சம்பளத்திற்கு மட்டும் பூஜை செய்கின்றார். ஆலயக் குருக்கள் மற்றும் பொது அர்ச்சகர்கள் ஆலயத்தில் சமய போதனை செய்ய வேண்டும். ஒவ்வொரு திருக்கோவில்களிலும் அறநெறிப் பாடசாலை, பஜனை மண்டபம், இந்து நூலகம், சமுதாய சேவை மன்றம் நடாத்த வேண்டும். சகல வித்தியாலய காரியங்களும் வெள்ளிக்கிழமை சாயங்காலம் தடை செய்யவேண்டியுள்ளது. அந்நேரதில் மாணவர்கள் ஆலயத்திற்குச் சென்று பஜனையில் கலந்து கொள்ள ஊக்குவிக்க வேண்டியுள்ளது. இதைப் பெற்றோர்கள், பெரியவர்கள், ஆசிரியர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஆலய நிருவாகங்கள் திரிசூலம் போல் நிர்வகிக்க வேண்டும். நடு சூலப்பகுதி என்பது ஆலய கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம், திருவிழா, திருவிளக்குப் பூஜை முதலியன. இரண்டு பக்கம் என்பது ஆன்மீக நூலகம், அறநெறிப் பாடசாலை, பஜனை சங்கம் முதலியன. வலது பக்க சூலம் என்பது சமுதாய சேவை – அதாவது அநாதை மாணவர்களுக்கு, விதவைகளுக்கு, அங்கவீனர் போன்றவர்களுக்கு உதவி செய்தல். ஆலய நிருவாகங்கள் பூஜை, சடங்குகள் மட்டும் நடைபெறக் கூடாது.

பள்ளிக்குடியிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்துக்கு மஹா கும்பாபிஷேகம் இடம்பெறுவது ஒரு மங்களமான சமாச்சாரம் ஆகும். இவ்வாலய பரிபாலன சபையினர்கள் மிக்கதிறமையுடன், உண்மையுடன் நிருவாகத்தை நடத்துகிறார்கள் என்பது நன்கு கவனிக்கக் கூடியதாக இருக்கிறது. இவ்வாலயத்துக்கான குடமுழுக்கு வைபவம் பள்ளிக்குடியிருப்பு வாசிகளுக்கு மட்டுமல்ல பூரண மூதூர் பிரதேசத்துக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். மணியோசை ஒலிக்கட்டும்.

*ஓம் கணபதேய நமஹ*

*ஆசியுடன்,*

ஸ்வாமி தந்திரதேவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிஷ்டா பிரதம குருவின்

## ஆசியுரை

இயற்கை அன்னையின் எழில் பெறு சோலையால் சூழப்பெற்று வற்றாத குளங்களாலும் வாவிகளாலும் வளம் பெற்று தர்மமும் சைவ நீதியும் சிறப்புற்று, விளங்கும் பள்ளிக்குடியிருப்பு கிராமத்தில் பல்லாண்டு காலமாக கோயில் கொண்டெழுந்தருளி அடியவர்க்கு அருள்பாலிக்கும் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் ஆலயம் பழுது பார்க்கப்பட்டு புதிய கலைப் பொலிவுடனும், அருட் பொலிவுடனும் அமைக்கப்பட்டு பள்ளிக்குடியிருப்பு கிராம மக்களின் அயராத உழைப்பினால் இன்று விநாயகப் பெருமானின் திருவருளுடன் கும்பாபிஷேகம் நிகழ்கிறது. இந்தப் புனித நிகழ்வையொட்டி, சகல மக்களும் நோய், துன்பம் இன்றியும் செல்வச் செழிப்புடனும் சைவநீதியுடனும் வாழவும், இந்நாட்டில் சாந்தி சமாதானம் ஏற்படவும் வேண்டும் என எல்லாம்வல்ல விநாயகப் பெருமானை வேண்டிக்கொண்டு எனது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

இப்படிக்கு,
**சிவஸ்ரீ க. கு. சீதாராம் குருக்கள்,**
*ஸ்ரீ பத்திர காளி அம்மன் ஆலயம்,*
*சம்பூர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி/ பள்ளிக்குடியிருப்பு

# ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய குருவின்

## ஆசிச்செய்தி

சைவ உலகின் மறுமலர்ச்சிக் காலம் என்று இன்றைய காலகட்டத்தைக் கூறலாம். ஒவ்வொரு கிராமத்திலும் ஆலயங்கள் யாவும் சைவ ஆகம முறைப்படி புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. அந்த வகையில் தட்சண கயிலாயம் எனப் போற்றப்படும் எமது நாட்டின் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பதியாம் பள்ளிக்குடியிருப்பு கிராமத்தின் நடுவே நீர் வளமும், நில வளமும் ஒருங்கே அமையப் பெற்ற இக்கிராமத்தில் ஸ்ரீ சித்திவிநாயகருக்கு இவ்வூர் மக்களின் அயராத உழைப்பின் பேரில் பன்நெடுங் காலமாகச் சிதைவுண்டு கிடக்கப்பெற்ற ஆலயம் இப்பொழுது விநாயகப் பெருமானின் திருவருளினால் கும்பாபிஷேகம் நிகழ்கின்றது. இந்தப் புனித நிகழ்வையொட்டி "கும்பாபிஷேக மலர்'' வெளியிடுவதை நான் பெரிதும் வரவேற்கின்றேன். ஆகவே இதே போன்று பல பெரிய உதவிகளைச் செய்த இவ்வூர் மக்களுக்கு இப்புதிய புத்தாயிரம் ஆண்டில் சாந்தியும் சமாதானமும் கிடைக்க வேண்டி எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டிக் கொண்டு எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படிக்கு
சிவஸ்ரீ கி. சிவானந்த சர்மா,
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய குரு,
பள்ளிக்குடியிருப்பு.

05.02.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு / பள்ளிக்குடியிருப்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

எமது ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் பழமையும் தொன்மையும் வாய்ந்ததாகும். எமது முன்னோர்களின் அரும் பெரும் முயற்சியினால் இவ்வாலயம் அமைக்கப்பட்டதை எமது மக்கள் நன்கு அறிவார்கள்.

ஆலய பரிபாலன சபையினர் ஆலயத்தின் மேம்பாட்டுக்காக அயராது உழைத்து வந்துள்ளனர். இப்பிரதேசத்தில் ஏற்பட்ட வன்செயல்களால் ஆலயம் பாதிக்கப்பட்டாலும் உடனுக்குடன் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆலய வழிபாட்டுக்கு உதவியதை நாம் எல்லோரும் அறிவோம். ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்யவேண்டு மென்பதை எமது ஊர்மக்கள் ஒரு மனதோடு ஏற்றுக் கொண்டு செயற்பட்டதை நினைக்கும் போது பேரானந்தம் அடைகின்றேன்.

எமது ஆலய பரிபாலன சபையின் செயலாளர், பொருளாளர், உபதலைவர், உப செயலாளர் ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆலய திருப்பணிக்காக உதவினார்கள். பொது மக்களும் நாங்கள் அழைத்த போதெல்லாம் மனமுவந்து ஒவ்வொருவரும் பல்வேறு பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாமல் பொருளுதவி, நிதி உதவி, உடல் உழைப்பு போன்றவற்றை உடனுக்குடன் செய்து இவ்வாண்டு ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அரும்பாடு பட்டுழைத்தனர்.

ஆலய பூசகர் அவர்களும் சிற்பாசாரிமார்களும் வேண்டிய ஒத்துழைப்பினை வழங்கினார்கள். அனைவருக்கும் நன்றி கூறவேண்டியது எமது கடமையாகும்.

அனைவருக்கும் விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டும். எமது ஊர் சிறந்து விளங்கவேண்டும் என எல்லாம்வல்ல விநாயகப் பெருமானைப் பிராத்திக்கின்றேன்.

**சி. பாக்கியராசா,**
*தலைவர்,*
*9ம் பிரிவு உறுப்பினர்.*
*பள்ளிக்குடியிருப்பு*
*தோப்பூர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின்

பண்பாட்டலுவல்கள் உதவிப் பணிப்பாளர்

திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் அவர்கள் வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

கிழக்கு மாநிலத்தில் தோப்பூரின் கண்ணே எழில் கொஞ்சும் கிராமமாக விளங்கும் பள்ளிக்குடியிருப்பிலே பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானது ஆலயம் பொலிவுற்று புனரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது, பெருமன நிறைவைத் தருகின்றது. காணிகள் சூழ நடுவண் அழகுமிகு தோற்றத்துடன் எம்பெருமான் ஸ்ரீ சித்தி விநாயகர் எழுந்தருளி அருள் பாலித்த வண்ணம் இருப்பது இப்பகுதி வாழ் சைவப் பெருங்குடிமக்கள் செய்த பேறு என்றே கூறவேண்டும்.

ஆலயத்தினைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்வதற்கான முயற்சிகளில் ஆலய பரிபாலன சபையினர் ஈடுபட்டிருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். துடிப்பாக இயங்கும் ஆலய பரிபாலன சபையினர் கும்பாபிஷேக விழாவோடு தொடர்பாகச் சிறப்பு மலர் ஒன்றினையும் அன்றைய தினம் வெளியிடுவது பெருமகிழ்ச்சிக்குரியதாகும். சிறப்பு மலர் ஆக்கபூர்வமான பல ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் என நினைக்கின்றேன். இவ்வாறான ஆக்கங்கள் இடம்பெறுவதன் மூலம் இம்மலர் எதிர்காலத்தில் சிறந்தவொரு ஆவணமாக அமையும் என்பதில் ஐயமில்லை. கும்பாபிஷேக விழாவும், மலர் வெளியீடும் சிறப்புற அமைய வேண்டுமென ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை

அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

திரு. ஆ. குணராசரெட்ணம் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

எமது கிராமத்தின் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளிவரும் இச்சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது ஆலயத்தின் வளர்ச்சிக்கு அன்று தொட்டு இன்று வரை எத்தனையோ அன்பர்கள், ஆதரவாளர்கள் அரும்பாடுபட்டு உழைத்து வந்துள்ளார்கள். அவர்களை என்றும் நன்றியுணர்வோடு நினைவுகூர வேண்டியது எம் அனைவரதும் கடமையாகும்.

அண்மைக் காலங்களில் ஏற்பட்ட இன வன்செயலின் போதும், பல பிரச்சனைகள், கஷ்டங்கள் மத்தியிலும் எமது ஆலய மேம்பாட்டுக்காக ஆலய பரிபாலன சபையும் எமது ஊர்மக்களும் அரும்பாடுபட்டு உழைத்து வந்துள்ளார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

தற்போதுள்ள ஆலய பரிபாலன சபையினர் விநாயகப் பெருமானின் அருளோடு மக்களின் அன்பையும், ஆதரவையும், பெற்று மலர்ந்துள்ள புத்தாயிரமாம் ஆண்டில் ஆலயத்தின் கும்பாபிஷேகத்தையிட்டு அனைத்து மக்களும் ஆனந்தமடையும் இவ்வேளையில் இப்பணிக்காக உதவிய ஆலய பரிபாலன சபையினர், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு எமது ஆலயம் தொடர்ந்தும் மேலும் வளர்ச்சியடைந்து விநாயகப் பெருமானின் அருள் என்றென்றும் எமக்குக் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திப்பதோடு ஆசிச்செய்தியை வழங்குவதில் மட்டில்லா மகிழச்சி அடைகிறேன்.

திரு/பள்ளிக்குடியிருப்பு,
தோப்பூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி
தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவர்
திரு. த. சிதம்பரப்பிள்ளை அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

தெட்சண கைலாசம் எனப் போற்றப்படும் திருக்கோணேஸ்வரத்தின் தெற்பாகத்தில் அமைந்துள்ள பள்ளிக்குடியிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் இக்கிராம மக்களின் வேண்டுதலுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஐங்கரனுக்கு குடமுழுக்குக் கும்பாபிஷேகம் நடாத்த ஆலய பரிபாலன சபையினரின் செயலைப் பாராட்டாமலிருக்க முடியாது.

வன்செயலால் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த இவ்வாலயம் திருத்தி அமைத்துப் புதுப்பொலிவுடன் காட்சியளிப்பது எல்லோர் மனங்களிலும் புதுப் பொலிவும் பக்தியும் ஏற்படுத்தும் செயலாக அமைந்துள்ளது. அது மட்டுமன்றி அன்றைய தினத்தில் சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிடுவது போற்றுதற்குரிய விடயமாகும். இத்திருப்பணியை மேலெடுத்துச் செல்லும் ஆலய பரிபாலன சபையினர், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு ஆனைமுகத்தானின் ஆசி எப்போதும் கிடைப்பதாக.

இந்நிகழ்வு சிறப்புற நடந்தேற ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கும் செயலக அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு இப்புனருத்தாரண நிகழ்வு சிறப்புற அமைய வாழ்த்துகிறேன்.

பள்ளிக்குடியிருப்பு,
தோப்பூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ෆැක්ස්/பக்ஸ்/Fax : 682013
දුරකථන/தொலைபேசி/Telephones:

අධ්‍යක්ෂක / பணிப்பாளர் / Director — 682014

පොදු / பொது / General — 696296, 696310, 682015, 682114, 682115, 681033

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
**Department of Hindu Religious and Cultural Affairs**

මගේ අංකය / எனது இல. / My No.

ඔබේ අංකය / உமது இல. / Your No.

98, වෝඩ් පෙදෙස / வோட் பிளேஸ் / Ward Place

කොළඹ - 7 / கொழும்பு - 7 / Colombo - 7

12.11.99

# வாழ்த்துச் செய்தி

பள்ளிக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தையொட்டி வெளியிடப்படும் மலருக்கு எனது வாழ்த்துக்களை அளிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

ஆலயங்கள் தெய்வ சாந்நியத்தோடு திகழ்வதற்கு நித்திய பூஜைகளும், குடமுழுக்கு போன்ற வைபவங்களும் மிகவும் அவசியமானவை. அப்போதுதான் ஆலயத்தை நாடிவரும் பக்தர்களுக்கு இறையருளும், மனநிறைவும் ஏற்படும்.

பள்ளிக்குடியிருப்பு பிரதேச மக்கள் மிகுந்த ஈடுபாட்டோடு இவ்வாலயத்தின் குடமுழுக்கை சிறப்புற நடத்துவதற்கு உரிய ஏற்பாடுகளை மேற் கொண்டுள்ளமை மிகுந்த மகிழ்ச்சி தருவதாகும். இப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும், பிரதேச மக்களுக்கும் ஸ்ரீ சித்தி விநாயகரின் நல்லருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்
*பதில் பணிப்பாளர்*
*இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சித்தி விநாயகர் ஊஞ்சல்

காப்பு

சீர் பூத்த வடகிழக்கிலங்கை மேவும்
செம்மை செறிபள்ளிக்குடி நகரில் வாழும்
ஏர் பூத்த பழனநடு விலங்கு கோயில்
இசை பூத்த விநாயகர் மேல் ஊஞ்சல் பாட
ஆர் பூத்த சடை மௌலி யரனாரீன்ற
அருள் பூத்த அறிவிச்சை தொழிலென்றோதும்
கார் பூத்த மும்மதத்த களிற்றின் பாதம்
கரம் பூத்த மலர் கொண்டே கருதி வாழ்வாம்.

நூல்

பலனோங்கு செம்பவளம் கால்களாக
பகர் வயிர ரத்தினமே விட்டமாக
குலனோங்கு வெண்டரளங் கயிறதாக
கூறரிய மாணிக்கம் பலகையாக
வலனோங்கு மூஞ்சல் மிசையினது வைகும்
மலர்மகளும் கலைமகளும் வடந்தொட்பாட
நலனோங்கு பள்ளிக்குடி நகரில் வாழும்
நாயகரே விநாயகரே ஆடீரூஞ்சல்.

உலகையொரு மலரயன் மால்கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட சித்திகாக்க
தவமறையோர் தூபமொடு தீபம் காட்ட
தாழ்ந்து கண நாதர் புகழ் மாலை சூட்ட
அவிர் சிங்க துவச முதல் வானந்தூர்ப்ப
அனந்தன் முதலூரவர்கள் செய செயென்றார்ப்ப
நவையறு பள்ளிக்குடி நகரில் வாழும்
நாயகரே விநாயகரே ஆடீரூஞ்சல்.

கொப்பினாடு துடிமுரசு முழுவம் ஆர்ப்ப
குடைகளுடனால வட்டங் கொடி நிழற்ற
தும்புரு நாரதர் வேத கீதம் பாட
தொண்டர்கள் மகிழ்ந்து தோத் திரங்கள் பாட
வம்ப விழுமலர் மாரி அமரர் பெய்ய
வர முனிவர் அடிபரவி ஆசிகூற
நம்பு மடியார்க்கருளி நன்குவாழும்
நாயகரே விநாயகரே ஆடீரூஞ்சல்.

அன்ன நடையயிராணி கவிதை பாட
அயிலை நிகர் விகர் விழியரம்பை களாசி கூற
வன்னமுலை ஊர்வசி தெணகவரி வீச
மணிகொள் சிருதாசி கமண்டலங் கைக்கொள்ள
மின்னகை மேனகை வெளிலை பாக்கு நல்க
வியந்து திலோத்தமை விவித நடஞ் செய்ய
நன்னயஞ்சேர் பள்ளிக்குடி நகரில் வாழும்
நாயகரே விநாயகரே ஆடீரூஞ்சல்.

மதிமுக மாலின் பனிநீர் வாசந்தூவ
மயிலை நிகர்சுகேசை மலரடிகள் நீவ
விதிமுறை மங்கலை முதலோராலஞ் சுற்ற
வேதியர் தம்மகளிர் சுப வசனஞ் சாற்ற
அதிவினய மொடு சுமனை ஆடிக்காட்ட
அண்டர் எல்லாம் கண்கொட்டா தமர்ந்து பார்க்க
நதியுலவு பள்ளிக்குடி நகரில் வாழும்
நாயகரே விநாயகரே ஆடீரூஞ்சல்.

கோல முறுவயிர மணிச் சுட்டியாட
குலவு மெழில் மாணிக்கத் தோடுமாட
வாலிய முத்தார மொடு மதாணியாட
வயங்கு குழை தொடியுடனங் கமுதமாட
சாலவொளிர் பாடக்மும் சிலம்புமாட
தண்டையோடு பாதசரந் தயங்கியாட
ஞாலமுகப் பள்ளிக்குடி நகரில் வாழும்
நாயகரே விநாயகரே ஆடீரூஞ்சல்.

முத்து நவமாதர் துதி கூறியாட
முகமனொடு புனல் மாதர் முன்னின்றாட
வந்தனையோ டுரகமட மாதராட
வரையினுயர் மாதரடி வணங்கியாட
கந்தருவ மாதரிசை பாடியாடக்
கருதரிய புவிமாதர் களி கொண்டாட
நந்து தவழ் பள்ளிக்குடி நகரில்வாழும்
நாயகரே விநாயகரே ஆடீரூஞ்சல்.


ஆரணரே தும்பிக்கையீ ராடீரூஞ்சல்
அழகொழுகு சவுந்தரரே யாடீரூஞ்சல்
பூரணரே புங்கலியே ஆடீரூஞ்சல்
புராதனரே புரந்தகரே ஆடீரூஞ்சல்
காரணரே காரணியே ஆடீரூஞ்சல்
கணிகைரே கண்மணியே ஆடீரூஞ்சல்
நாரணரே நாரணியே ஆடீரூஞ்சல்
நாயகரே விநாயகரே ஆடீரூஞ்சல்


பனிவரையில் வருமறையே பரமே போற்றி
பகருமற மெண்ணான்கும் வளர்த்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவனே போற்றி
தணப்பில் பல சித்தி வடிவானாய் போற்றி
இனிமை மிகு மாரமுதே கனியே போற்றி
எவ்வுயிர்க்கும் தயாபரனாய் இருந்தாய் போற்றி
நலம்மிக்க விநாயகன் நானுஞ்சல் பாட
நாயகரே விநாயகரே ஆடீரூஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தின் பழைய தோற்றங்கள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய கும்பாபிஷேக ஆலோசனைக் கூட்டத்திற்கு வருகை தந்த சுவாமி தந்திரதேவா அவர்களை வரவேற்கும் போது எடுக்கப்பட்ட படம்.



சுவாமிஜி அவர்களை ஆலயத் திருப்பணி வேலைகளைப் பார்வையிட ஆலயப் பரிபாலன சபையினர் அழைத்துச் செல்கின்றனர்.



ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் ஆன்மீக நிகழ்வுகளில் கலந்து கொண்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஒரு பகுதியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

## வரலாற்றுப் பார்வையில்...

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர்ப் பிரதேசத்தின் மிகப் பழம்பெரும் கிராமமான தி/ பள்ளிக்குடியிருப்பு வயலும் வயல் சார்ந்த மருதநிலத்தில் அமைந்துள்ளது. மருத நிலத்தின் ஒரு பெயர் பள்ளி என்பதனாலும் பள்ளிக்குடியிருப்பு எனப் பெயர் பெறக் காரணமாய் அமைந்தது.

மகாவலி நீர்வளமும், குளங்களின் நீர்நிலைகளும் கிராமத்தைச் சூழ நெல்வயல் வெளிகளை என்றும் பசுமைகுன்றாது, நெல் சிறப்பாக விளைவதனாலும் பிரம்பின் அளவு தடிப்பாக ஒவ்வொரு வேளாண்மையும் வளர்வதால் சூழவுள்ள வயல் வெளிக்கு பிரம்புவெளி எனக் காரணப்பெயர் வரலாயிற்று. இங்குள்ள மக்கள் தொன்றுதொட்டு தமது குலத்தொழிலாக நெற்செய்கையும், கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டிருந்தனர்.

குளக்கோட்டு மன்னனால் கோணேசர் கோயிலுக்கு நெல் தானியங்கள் வழங்கும் கிராமமாக 7 குடி மக்களைக் குடியேற்றியதாகவும் சிந்து நாட்டு வேளாளர்களே இங்கு குடியமர்த்தப் பட்டதாகவும் பழைய வரலாறுகள் உள்ளன. தி/பள்ளிக்குடியிருப்பிலிருந்து 1957 களின் பின்னர் தி/சிறினிவாசபுரமும் 1970 களின் பின்னர் தங்கபுரம், இத்திக்குளம் முதலான கிராமங்களும் விரிவடைந்துள்ளன.

இவ் ஆலய வரலாறானது 1850ம் ஆண்டிற்கு முன்பிருந்தே இருந்திருக்கலாமென ஊகிக்கப் பட்டாலும் 1875ம் ஆண்டின் பின்பு சிறப்பாகப் பெரிய ஆலய அமைப்பு வடிவில் உருவாக்கப்பட்டுள்ளமையை வாழ்ந்த மூத்தோர் வாயிலாக அறியமுடிகின்றது.

ஆலய ஆரம்பம் ஊரின் மத்தியில் அமைப்பதற்குத் திரு. சின்னத்தம்பி என்பவர் பிடியரிசி சேர்த்தும் அதை ஏலத்தில் விற்றுப் பணம் சேர்த்ததாகவும் தனது கூடுதலான பங்களிப்போடு நிறுவப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அன்னாரது முயற்சியின் பயனாகச் சுமார் 150 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்ததும் ஆகம விதிப்படி அமைந்ததுமான இவ்வாலயம் இப் பிரதேசத்தில் சிறந்த சிற்ப அமைப்புக்களுடன் கூடியதுமாக இருக்கின்றமை அக்காலத்தில் வாழ்ந்து இதை அமைத்தமை பெருமைப்படவேண்டிய விடயமாகும்.

நிர்வாக அமைப்பு முறையாக எழு குடிமக்களில் இருந்தும் ஒவ்வொருவர் தெரியப்படுவார்கள். இவர்கள் அடப்பன்மார் என அழைக்கப்படுவார்கள். இவர்களுள் முதற்குடி என உமணகுடியிலிருந்து தலைமை அடப்பன் தாய்வழியாகத் தெரியப்பட்டு மணியகாரராக இருப்பார். (தலைவராக) ஏனைய பெரிய குடிகளில் இருந்து செயலாளர் பொருளாளராக கடமைக்கு அமர்த்தப்படுவார்கள். அதன் வழியாக திரு. கோணாமலை, திரு. காளியப்பு திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களின் வழி வழியாக 1950 களிலிருந்து திரு. க. மாரிமுத்து என்பவர் தலைமை மணியகாரர் அல்லது முதல் அடப்பனாகத்தெரிவு செய்யப்பட்டார் 1957 பெரு வெள்ளத்தின் பின் 1960களின் போது கும்பாபிஷேகம் நடந்ததாக அறிய முடிகின்றது அவ்வேளையில் தலைவராக திரு. க. மாரிமுத்து அவர்களும் செயலாளராக திரு சி. கந்தையா (விதானையார்) அவர்களும் ஏனைய சிறப்பான அங்கத்தவர்களோடு நீண்ட காலம் பணியாற்றி ஆலய வளர்ச்சிக்கு உதவியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக பக்தி மேம்பாட்டிற்காக திரு. சி. கந்தையா (விதானையார்) அவர்கள் கூட்டுப் பிரார்த்தனைகளைத் தினம் நடாத்துவதும் விசேடதினங்களில் சிறப்புச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தும் விஷேட தினம் திதிகளைச் சிறப்பாகச் செய்து இக்கிராமம் பூரண சைவப் பாரம்பரிய பழக்க வழக்கங்களுடன் மக்கள் வாழ இவர்களது நிர்வாக முறை இருந்தது.

இரண்டாவது தடைவையாக 1976களின் போது ஆலய பரிபாலன சபைத்தலைவராகவும், இந்து இளைஞர் மன்றத் தலைவராகவுமிருந்த திரு ஆ. குணராஜரெட்ணம் அவர்களும் செயலாளராக இரா. கோபாலபிள்ளை, பொருளாளராக மா. சிவலிங்கம் அவர்களும் இருந்து அனைத்து பொதுமக்கள் இளைஞர்களின் முழு முயற்சியால் நடாத்தப்பட்டது.

ஆலய பரிபால்னசபை அமைக்கப்பட்டு திரு. செ. வினாயகமூர்த்தி அவர்களின் தலைமையில் சிறப்பாகப் பணி தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் சென்றது. 1985களின் பின்னர் இவ்வாலய நிர்வாகமுறையில் 10 திருவிழா அங்கத்தவர்களும் 10 குடியினரிலிருந்தும் குடித்தலைவர் அல்லது அங்கத்தவர் தெரியப்பட்டு எல்லோருக்கும் ஒவ்வொரு வருடம் தலைவராக இருந்து பணியாற்றும் பெரும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இது திருவுளச்சீட்டு எடுக்கும் முறையில் தெரிவுகள் இடம் பெறும். இதே போல் முக்கிய பதவிகளுக்கும் (செயலாளர், பொருளாளர்) திருவுளச்சீட்டு முறையில் தெரிவு இடம் பெற வழி செய்தமை எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கும் செயலாகவும், வீணான போட்டிச் செயற்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட தோடு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அவர்கள் சிறப்பாகச் செயற்படவும் வழிவகுத்தது.

குறிப்பாக 1992களில் வன்செயலால் ஆலயம் பாதிக்கப்பட்ட வேளையில் வடகிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அமைச்சில் 25,000 ரூபா நிதியைப் பெற்றுதர உதவிய தலைவராக இருந்த திரு. க. சண்முகராசா அவர்கள் நினைவு கூரவேண்டியவராவார்.

தற்போது புதிய மில்லேனியத்தில் 2000ம் ஆண்டில் எமது சித்திவிநாயகரின் அருள்பாலிப்பின் நிமித்தம் தற்போதைய நிர்வாக சபையினர் பொதுமக்களின் பாரிய ஒத்துழைப்போடு இக்கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இதற்கு ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா மகராஜ் அவர்களது பங்களிப்பும் காத்திரமாக அமைந்தது.

இங்கு பஞ்சாயத்து அமைப்பிலான ஒரு நிர்வாக முறை இருந்திருக்கிறது. ஒவ்வொரு குடியில் இருந்தும் தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள் சேர்ந்து முடிவுகள் எடுப்பர். (உ+ம்) திருமணங்கள், பூப்புநீராட்டுவிழா, வேறு சங்கத்தலைவர், உறுப்பினர் தெரிவுகள் முதலிய விடயங்களில் இவ் அடப்பன்மாரின் அனுமதி வேண்டும். இதில் தட்டம் வைத்தல் (வெற்றிலை வைத்தல்) முதல் தட்டம் முதல் தலைமை அடப்பருக்கும் ஏனையவர்களுக்கும் வைத்து அழைத்து அனுமதியைப் பெறுவர். இவர்கள் வீடுகட்டுதல், திருமணங்களைப் பேசி முடித்து வைத்தல் முதலான விடயங்களில் ஊர்மக்கள் கட்டுப்பாட்டுக்குள் நடந்து கொள்வர். இம் மரபு தற்காலத்தில் அருகி வந்தாலும் கிராமத்தின் ஒற்றுமை செயற்பாடுகள் தொடர்கின்றமையை அறியமுடிகிறது. (உ+ம்) மரணவீடு ஒன்று நடைபெற்றால் வேளாண்மை அறுவடை நடை பெற்றாலும் அதை நிறுத்திவிட்டு அனைவரும் கலந்து கொள்வது வழக்கமாக உள்ளதைக் குறிப்பிடலாம்.

### *திருவிழாக்கள்*

10 திருவிழாக்கள் உள்ளன. முன்பு ஆரம்ப எழு குடியினருக்கும் ஏழு திருவிழா போக மீதி 1, 2, 4ம் திருவிழாக்களில் 1ம் திருவிழா பொதுவாகவும்,2ம் திருவிழா உமண குடியினராலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சிலகாலம் திரு. அ. கணபதிப்பிள்ளை என்பவராலும்) 4ம் திருவிழா சலவைத் தொழிலாளி சின்னத்தம்பி அவர்களாலும் முன்பு நடத்தப்பட்டது. பின்னர் இவை தற்போது 1ம் திருவிழா வெள்ளக்குடியினருக்கும் 2வது திருவிழா ஆசாரி குடியினருக்கும் 4ம் திருவிழா மாலயன் குடியினருக்கும் வழங்கப்பட்டு சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றன.

1964 களுக்கு முன்பு இங்கு திருவிழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளன. 7ம் திருவிழாவினைத் தொடர்ந்து சுவாமி வெளிவீதியில் சம்பறம் – தேரில் உலாவருவதும், விசேடமாக யாழ்ப்பாணத்திலிருந்து பிரபல நாதஸ்வர மேளக்காரர்கள் 7, 8 சோடியினர் அழைக்கப்படுவதும், சின்னமேளம் எனும் நாட்டிய நாடகம், வாண வேடிககள் இடம் பெறுவதும் குறிபப்பிடக்கூடிய சிறப்பம் சங்களாகும்.

1985களின் முன்னர் ஆவணியில் நடாத்தப்பட்ட திருவிழாக்கள் 1985களின் பின் பங்குனி உத்தரத்தில் தொடங்கி நடாத்தப் படுகின்றது. இது காலபோக அறுவடையை மையமாக வைத்து மாற்றப்பட்டது. 1980களின் முன்னர் கோவில் ஐயருக்கு வரியாக ஒவ்வொருவரும் 10 நாள் நெல் கொடுக்கும் வழக்கம் இருந்து பின்னர் அவற்றை பணமாக மாதச் சம்பள அடிப்படையில் வழங்கப்படுகின்றது. (இவ்வரலாறு திரு. வ. அ. இராசரெட்ணம் அவர்களின் சிறுகதையில் (1966ல் உள்ளது) பத்துத் திருவிழா முடிவில் பூங்காவனத் திருவிழா தீ மிதிப்பு, தீர்த்தம், அன்னதானம் என்பனவும் நடைபெறுகிறது.

நித்திய பூசைகளாகத் தினம் மூவேளை நடைபெறுகிறது திருவிழாவோடு கந்தசஷ்டி விரதம் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. 6 நாட்களும் விஷேட அபிசேகத்துடன் திருவிழாவாக அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப் படுகின்றது. அத்தோடு திருவெம்பாவை, பிள்ளையார் காப்பு, கேதார கௌரிகாப்பு விரதம், சிவராத்திரி, புதுவருடப்பிறப்பு முதலான பல தினம் திதிகளும் சிறப்பாக நடைபெறுகின்றன.

பௌதீகவள விருத்தியை நோக்கும் போது கோயில் அமைப்பு காணியும், கலாச்சார மேடை அமைந்த புறவீதிப்பகுதியும் திரு. சி. தம்பாப்பிள்ளை சகோதரர்களால் வழங்கப்பட்டிருக்கிறது. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் ஆகம முறைப்படியானதும் சிற்ப வேலைப்பாடுகளையுடையதுமான ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. அறியக் கிடைத்த ஆதாரங்களின்படி வைரவர் கோயில் திரு. ப. முத்துக்குமார் குடும்பத்தினரும் மடப்பள்ளி புனருத்தாரணம் திரு. ஆ. கனகரெட்ணம் குடும்பத்தாரும் மதில்கள் 10, 9, 8,7,ம் திருவிழாக்காரர்களாலும் விழா மண்டபம் உமண குடியினராலும் தெற்கு வாசல் மண்டபம் தோப்புச்சி குடியினராலும் முருகன் ஆலயம் திரு. கந்தையா – தவராசா குடும்பத்தினராலும் மணிக்கோபுரம் திரு. பொ. அழகுதுரை குடும்பத்தினராலும் நவக்கிரகக்கோயில் த. ஈ. வி. பு அமைப்பினராலும் காரியாலயம் படைத்தார்குடியினராலும் நிறைவு செய்துகொடுக்கப்பட்ட பாரிய தேவைகளாகும்.

எழுந்தருளி பிள்ளையார் விக்கிரகம் திரு. செ. வினாயகமூர்த்தி குடும்பத்தினராலும் முருகன் விக்கிரகம் திரு. சி. கந்தையா குடும்பத்தினராலும் வழங்கப்பட்டன. இன்னும் பல ஆலயபௌதீகவள தேவைகள் பலராலும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

வயல்காணிகளாக ஒவ்வொரு ஏக்கர் நிலத்தை திரு. செ. வினாயகமூர்த்தி குடும்பத்தினரும், திரு. மா. கனகசிங்கம் குடும்பத்தினரும் வழங்கியுள்ளனர்.

பலர் மாடுகளையும் நிதியுதவியும் சரீர உதவிகளையும் காலம் காலம் வழங்கி ஆலய வளர்ச்சிக்கு உதவியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கிராம ஏனைய வழிபாடுகளாக முக்கியம் பெறுபவை கொம்பு விளையாட்டு, ஐயனார், நாயன்மார், வன்னித்தம்பிரான், அம்மன், நாகதம்பிரான், மோராண்டகுள பிள்ளையார், தங்கபுர தங்கவிநாயகர், சிறினிவாசபுர கற்பகவிநாயகர், கிராண்டகுள, மரவட்டகுள கட்டுகளிலுள்ள அம்மன் பிள்ளையார், இத்திக்குள பிள்ளையார் போன்றஆலயங்களும் எம்மவரின் வழிபாடு களாகவுள்ளன.

தங்கபுரத்தில் 1986 களின் பின்னர் நாகம்பாள்ஆலயம் பொதுமக்கள் உதவியுடன் திரு. மா. சிவலிங்கம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டு ஒவ்வொரு வைகாசி பௌர்ணமியில் விசேட பொங்கல்விழா இடம்பெறுகிறது. பல கிராமத்து மக்களும் இதில் கலந்து வழிபடுவார்கள்.

இக் கும்பாபிஷேக விசேட மலரில் கிராம ஆலயவழிபாடுகள் சம்பந்தமான வரலாறு பற்றி வெளிவர வேண்டியது அவசியம் என்பதாலும் – கிடைக்கப்பெற்ற ஆதாரங்களைக் கொண்டு ஓரளவே குறிப்பிட முடிந்தது. எழுத்து மூலமான ஆவணங்கள் இல்லை. வாழும் மூத்தோரின் அனுபவ அறிவிலிருந்து கிடைக்கப் பெற்ற ஆதாரங்களேயாகும்.

ஆலய நிர்வாகமுறை கிராம நிர்வாகமுறையாக அக்காலத்திலிருந்தது. சலவைத் தொழிலாளிக்கும் 1960களில் திருவிழாக்கள் வழங்கப்பட்டிருந்தன. அனைவரையும் ஒரேகுடும்பமாக மதிக்கும் பண்பும் கோயில்களின் வண்ணக்கர்கள், கங்காணம் முதல் அடப்பன், மணியகாரன் என்ற முறைகளால் விழாக்காலங்களில் ஏற்படும் சர்ச்சைகளில் இருந்து விடுபட தியாக சிந்தையோடும், விட்டுக் கொடுப்புகளோடும் மூத்தோரின் வழிகாட்டலோடும். 10 குடிகளுக்கும் சமமாக தலைவராகவும் ஏனைய பொறுப்பான பதவிகளை வழங்கும் வாய்ப்பும் கிடைத்து ஒவ்வொருவரும் சிறப்பாகத் தமது பதவிக்காலத்தில் ஆலயத்தை நிர்வகித்து வருவதும் எல்லாவிடயங்களிலும் எல்லோரும் ஒத்துழைத்து ஒரே குடும்பமாகச் செயற்பட்டு வரும் பாங்கு இப்பிரதேசத்திற்கு ஒரு முன்மாதிரியானது எனக் கூறுவதில் பெருமையடைவதோடு எதிர்காலச் சந்ததியினரும் இப்பாரம்பரியத்தை மதித்து மனித நேயம் தொடர்ந்து வாழ கிராமம் ஒற்றுமையில் சிறக்க தியாக, தியான பக்தியுணர்வோடு நீடூழி வாழ சித்திவிநாயகர் அருள்பாலிப்பார்.

ஆ. செல்வநாயகம்
*பள்ளிக்குடியிருப்பு.*

## ஒழுக்கமுடன் வாழ்வதால் என்ன பயன்

*பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு*
*நிலக்கிழமை மீக்கூற்றம் கல்வி நோயின்மை*
*இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும்*
*ஒழுக்கம் பிழையாதவர்*

*உயிர் குடியிற் பிறக்கும் பெருமை, நீண்டநாள் உயிர் வாழ்தல், செல்வச் சிறப்பு, அழகிய தோற்றம், குலத்துக்கு உரியோராதல், சொல்லாட்சி, கல்வி அறிவு, நோயற்ற வாழ்வு என உயரிய வாழ்வுக்கு இலக்கணமாய்க் கூறப்பட்ட எண் வகைச் சிறப்பினையும் ஒழுக்கநெறி தவறாது நடப்பவர்கள் வாழ்வில் அடையப் பெறுவர்.*

*- ஆசாரக் கோவை -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம்

## - ஒரு விளக்கம் -

சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திர குருக்கள்,
*(வவுனியா)*

கும்பாபிஷேகம் என்பது நான்கு வகையாகின்றன. ஆவர்த்தம், அநாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரீதம், என்பன அவை. புதிதாக ஆலயம் அமைத்துப் புதியவிக்கிரகம் வைத்துப் பிரதிஷ்டை செய்வது ஆவர்த்தம் என்றும், சிதைந்த ஆலயத்தைத் திரும்பவும் கட்டிவிக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வது அநாவர்த்தம் என்றும், ஸ்தூபியைப் பழுது பார்த்தும் அதில் இருக்கின்ற விக்கிரகங்களைத் திருத்தியும் பிரதிஷ்டை செய்வது புனராவர்த்தம் என்றும், ஆலயத்தினுள் தற்செயலாக மரணம் ஏற்பட்டாலும், திருடர்கள் புகுந்து அனர்த்தங்கள் ஏற்பட்டாலும் அதற்காக உடனடியாகச் செய்வது அந்தரீதம் எனவும் கூறப்படுகின்றன.

அந்தரீதக் கும்பாபிஷேகத்திற்கு நாள், நட்சத்திரம், முகூர்த்தம் என்பன பார்க்கத் தேவையில்லை. இதைப் பிராயச் சித்தக் கும்பாபிஷேகம் என்றும் அழைப்பர். இந்த வகையில் இப்போது நடைபெறுகின்ற இந்த விநாயகர் கும்பாபிஷேகம் ஆவர்த்தம் என்றே சொல்லலாம்.

கும்பத்திலே எம்பெருமானை எழுந்தருளச் செய்து, யாகத்திலே பிரதான வேதிகையின் நடுவே இருத்தி வலது புறத்திலே சக்தி குடும்பமும், எட்டுத்திக்குகளில் அஷ்ட வித்யேஸ்வரரையும் வைத்து பூஜித்து ஓம் குண்டம் அமைத்து அதிலே சிவாக்கினியை உண்டாக்கி அந்த அக்கினியிலே எம் பெருமானை ஆவாகித்து மூல மந்திரத்தினாலும், காயத்திரி மந்திரத்தினாலும் சமித்து நவதானியம், நெற்பொரி அன்னம், நெய் என்பவற்றால் ஓமம் செய்து வழிபடுதல் யாகபூஜை எனப்படும்.

குடம் உடலாகவும் அதிலே சுற்றப்படுகின்ற நூல் நாடிகளாகவும், மாவிலை சடையாகவும், தேங்காய் தலையாகவும், கூர்ச்சம் கேசமாகவும், சுத்தப்படுகின்ற ஆடை தோலாகவும் நீர் இரத்தமாகவும் உள்ளே போடப்படுகின்ற நவரெத்தினம், பவுண் என்பன பிரானாகவும் மந்திரங்கள் சக்தியாகவும் அமையும் கும்பாபிஷேகத்தின் முதல்நாள் மந்திரங்களோடு நிகழும் கடஸ்தாபனம் இவற்றைத் தெளிவாகக் காட்டும்.

யாகத்திலே வைத்துப் பூஜித்த கும்பத்திலிருந்து கருவறையிலே அமைந்திருக்கின்ற எம் பெருமான் திருவுருவச் சிலைக்கும் நூல் போடப்பட்டு அஷ்டமூர்த்தி, மூர்த்தீஸ்வரர் மூர்த்தீஸ்வரி ஆகியோரை அக்கினியிலே பூஜித்து ஓமம் செய்து எம்பெருமானது சிலையை, இடுப்பின் கீளுள்ள பகுதியை பிரம்ம பாகமாகவும், கழுத்து முதல் இடுப்பு வரையுள்ள பகுதியை விஷ்ணு பாகமாகவும், கழுத்துக்கு மேலுள்ள பகுதியை ருத்திர பாகமாகவும், மூன்று பாகங்களாகப் பகுத்து யாகாக்கினியிலே ஆதி செய்து நூலின் மூலமாகக் கருவறையிலே இருக்கின்ற பெருமானுக்கு மூன்று முறை சென்று ஆகுதி மூலமாக குடும்பத்திலும் அக்கினியிலும் ஆவாகித்த மூர்த்தியைச் சேர்த்தல் "ஸ்பர்சாகுதி" என்று சொல்லப்படும்.

இவை முடிந்ததும் யாக கும்பத்திலே, அக்கினியிலே ஆவாகனம் செய்த மூர்த்தியை சேர்த்துப் பஷ்டிபாஞ்சலி செய்து, கும்பத்திற்குத் தீபாராதனை செய்து வேத ஸ்தோத்திர தேவாரப் பாராயணம் செய்து, சர்வ மங்கள வாத்திய சகிதம், சகல விதமான ராஜ உபசாரங்களோடு வீதி வலமாக வந்து பெருமானுக்கு அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக வழிபாட்டுத் தொன்மையும் சிறப்பும்

திரு. செ. பத்மசீலன்,
ஆசிரியர்

எல்லாவற்றுக்கும் மேலான பரம்பொருளை வழிபடும் மார்க்கங்கள் ஆறு. அவையே ஆறுவகைச் சமயங்களாகும். இறைவனை எந்த வடிவில் நாம் வழிபடுகின்றோமோ அந்தவடிவில் அருள் புரிவார். இவ் அறுவகைச் சமயங்களில் கணபதியை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமே காணாபத்தியம். இவர்களைக் காணபதர் என அழைப்பர். எனினும் எமது நாட்டிலேயே இந்துக்கள் மட்டுமன்றி பௌத்தர்களும் கணபதியை வழிபடுவதும், யாவா, பர்மா, கம்போடியா, திபெத், மங்கோலியா, ஜப்பான், நேபாளம், சீனா போன்ற நாடுகளில் வெவ்வேறு நாமங்களில் ஆற்றப்படுவதும், காணாபத்தியம் குறிப்பிட்ட காணபத்தர்குளுக்கு உரிய நெறியில் நின்றும் விரிவடைந்து பலராலும் போற்றப்படுவதையே காட்டுகிறது.

## விநாயகர் வழிபாட்டின் தொன்மையும், வளர்ச்சியும்

விநாயகர் வழிபாடு சிந்துவெளியில் இடம்பெற்றமைக்கு இலக்கிய ஆதாரங்கள் இல்லை. எனினும் அங்கு காணப்பட்ட யானை உருவங்கள் இவ் வழிபட்டுடன் தொடர்புடையதாக இருந்திருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது.

வேத இலக்கியத்திலே "கணாம் த்வாம் கணபதிம் அவாமஹே" எனும் யசுர் வேதத்திலுள்ள சத ருத்திரியமும், வாஜ சநேஜ சம்ஹிதை ஆகியவற்றில் விநாயகர் பற்றிய குறிப்புக்களும், அதில் "கணபதிக்கு வணக்கம்" என்றும் கூறுகின்றது. மேலும் ஐதரேய பிராஹ் மணத்திலே விநாயகர் விக்கினங்களைத் தீர்த்து வைப்பவர். சாந்தப்படுத்துபவர் என்ற குறிப்பும் உள்ளது. கணபதி உபநிடதத்திலே விநாயகரைப் பற்றிக் கூறும் போது எல்லாம் நீயே படைப்பவனும், காப்பவனும், அழிப்பவனும் என்றும், ஏரம்ப உபநிடதத்திலும் விநாயகரைப் பற்றிக் குறிப்புக்களைக் காணலாம்.

### காயத்திரி மந்திரம்

"ஓம் தத்புருஷாய வித்மஹே
வக்ரதுண்டாய தீமஹி
தந்தோ தந்தி : பிரசோதயாத்"

எனக் கூறுகின்றது. இவ் மந்திரத்தைத் தினமும் 108 தடவை உச்சரித்தால் எல்லாத் தடைகளையும் கடந்த ஒருவன் செயல்களில் வெற்றி பெறலாம்.

இவ்வாறு விநாயகர் வழிபாடு தொன்மையாக இடம்பெற்றது எனினும், புராண இதிகாசங்கள் மூலமே பிரசித்தி பெறுகின்றது எனலாம். இதனை விநாயகர் புராணம், முக்கல புராணம், கணேச புராணம், பவிஷ்ய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம், போன்ற புராணங்களின் மூலம் அறியலாம். கணேச கீதை, கணேசகல்ப்பம், விநாயபரத்துவம், விநாயகர் கவசம், இராமாயணம், மகாபாரதம் போன்ற சமய இலக்கியங்களிலும் விநாயகர் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

விநாயகரின் தோற்றத்தைப்பற்றி வெவ்வேறு புராணக்கதைகள் குறிப்பிடுகின்றன. எடுத்துக் காட்டாக இவரது தோற்றத்தைக் கந்தபுராணம் கயமுகன் உற்பத்திப்படலம் விரிவாக கூறும்.

திருக்கைலாசத்தில் ஒரு சமயம் சிவபெருமானும், உமாதேவியாரும் திருவுலா வந்து கொண்டு இருந்தார்கள். அங்கேயுள்ள மண்டபம் ஒன்றில் பிரணவம் சித்தரிக்கப்பட்டிருந்தது. அதனை உமையவள் பார்க்கிறாள். சிவ ஆணையால் அந்தப் பிரணவ எழுத்து இரண்டாகப் பிரிந்து ஆண்யானையாகவும், பெண்யானையாகவும் சேர்ந்து நின்றது. அவற்றின் மத்தியில் ஐந்து கரமும் யானை முகமும் இளம்பிறைச் சந்திரன் போலும் வயிறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைய ஓர் குழந்தை தோன்றியது. இறைவன் அக்குழந்தையை எடுத்து வந்து இறைவியின் கரத்தில் கொடுத்து விநாயகர் என்று நாமகரணம் சூட்டினார். (வி. நாயகன்) தனக்குமேல் தலைவன் இல்லாதவன் என்பது இதன் கருத்தாகும்.

*அக்கணத் தாயிடை ஐங்கரத் தவனருள்*
*முக்கணல் வாயினால் மும்மதத் தாறுபாய்*
*மைக்கருள் களிறெனும் மாமுகத் தாறுபாய்*
*செக்கர் வார் சடைய னோர்சிறுவன் வந் தருளினான்.*
*(கயமுகன் உற்பத்திப் படலம் 148)*

சிவன் முப்புரங்களை எரிக்கச் சென்ற போது, சிவன் சென்ற தேர்ச்சில்லு முறிவடைந்தமையும், அதற்கு காரணம் விநாயகரை வழிபடாது சென்றமை என்ற கருத்து அருணகிரி நாதர் திருப்புகழில் "அச்சிவன் உறைதரு அச்சது பொடி செய்த அதிதீரா" வரிமூலம் எடுத்துக் காட்டுகின்றார்.

வியாசர் மகாபாரதக் கதையைச் சொல்ல விநாயகர் எழுதியமையும், அவரது தந்தம் எழுத்தாணியாகப் பயன்படுத்தப்பட்டமையும் விநாயகர் வழிபாட்டை எடுத்துரைக்கின்றது.

அகத்திய முனிவர் வாதாபி என்னும் அரக்கர் இடையே அகப்பட்ட போது துன்பம் அடைந்ததாகவும், பின்னர் வாதாபி கடலினுள் மறைந்த போது அகத்தியர் கணபதியின் அருளால் கடலை வற்றச் செய்து, வாதாபியை வென்றதாகவும், இதன் பின்னர் அகத்தியரால் "வாதாபி கணபதி" பிரதிஷ்டை செய்து வழிபட்டார் எனவும் அறிய முடிகின்றது.

தென்னக வரலாற்றின் ஆரம்ப நிலையில் விநாயகர் வழிபாடு இடம் பெற்றமைக்குச் சான்று இல்லை எனினும், சங்கமருவிய காலத்தில் "கரகங் கவிழ்ந்த காவிரிப்பாவை" எனும் மணிமேகலை இலக்கியம் குறிப்பிடும் கருத்தில் விநாயகர் கமண்டலத்தை கவிழ்த்தார் எனவும் அறிய முடிகின்றது.

பல்லவர் காலத்தில் திருமுறைகளில் விநாயகரைக் குறித்துப் பாடும் தன்மையினைக் காணலாம். எடுத்துக்காட்டாக ஞானசம்பந்தர் "பிடிய தனுருவுமை கொளமிகு கரியது" எனக் குறிப்பிடுகின்றார். மேலும் சிறுத் தொண்டர் நாயனார் விநாயகர் வழிபாடு ஆற்றினார் எனவும் அறிய முடிகின்றது.

சோழர் காலத்தில் விநாயகர் வழிபாடு சிறப்புற்றிருந்தமைக்கு அக்கால விநாயகர் ஆலயங்கள் சான்று பகிர்கின்றன.

பொல்லாப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி, ஔவையார், நக்கீரர், கபிலதேவர் போன்றோர் விநாயகர் வழிபாடாற்றி அருள் பெற்றனர் எனவும் இலக்கியங்கள் மூலமாகவும் அறிய முடிகிறது.

மேலும் அக்கால மக்கள் பின்பற்றிய விநாயகர் விரதங்கள் விநாயக சதுர்த்தி; சங்கடஹரசதுர்த்தி விநாயக சஷ்டி என்பன விநாயக வழிபாட்டின் வளர்ச்சியினை எடுத்துக் காட்டுவதோடு, தொடர்ந்தும் தற்காலத்திலும் மக்கள் எந்தக் காரியத்தையும் தொடங்க முன்னர் விநாயகரை வழிபடத்தொடங்கும் மரபு காணப்படுகின்றது.

## ஈழத்தில் விநாயகர் வழிபாடு

பாரதப் பூமியுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்ட ஈழத்தவர், அக்காலத்தில் இருந்தே விநாயகர் வழிபாட்டைப் பின்பற்றினர் என ஊகிக்க முடிகிறது. எனினும் விநாயகர் வழிபாட்டின் வளர்ச்சியும், தொடர்ச்சியுமாக இன்றைய ஆலயங்களான வடக்கே நல்லூர் வெய்யிலு கந்த பிள்ளையார், உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார், சுழிபுரம் கண்ணைக்கோதி காக்கைப் பிள்ளையார், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார், பருத்தித்துறை தில்லையம்பலப் பிள்ளையார், மருதடி விநாயகர், முறிகண்டிப் பிள்ளையார் போன்றனவும், கிழக்கே மட்டு அமிர்தகழிப் பிள்ளையார், திருமலை ஆலடிப் பிள்ளையார் திருமலை கேணியடி சின்னத் தொடுவாய் பிள்ளையார்,திருமலைப் பெரிய தொடுவாய்ப் பிள்ளையார், மனையாவழிப் திருச்சிற்றம்பலப் பிள்ளையார், மடத்தடி வீரகத்திப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார், திருமலை சமாதுப் பிள்ளையார், இரத்தினசிங்கப் பிள்ளையார், பத்தாம் குறிச்சி கடற்கரைப் பிள்ளையார், திரியாய் பிள்ளையார், சுண்டங்காட்டுப் பிள்ளையார், சாம்பல்தீவு வடலிபம்பதிப் பிள்ளையார், நிலாவெளிப் பிள்ளையார், குச்சவெளி கடற்கரைப் பிள்ளையார் போன்ற வரலாற்றுடன் தொடர்புடைய விநாயகர் ஆலயங்கள் மக்களால் வழிபாடு ஆற்றப்பட்டு வருவதும், விநாயகர் சதுர்த்தி, விநாயக சஷ்டி, சங்கடஹரசதுர்த்தி போன்ற விரதங்களை மக்கள் அனுஷ்டித்து வருவதும், விநாயகர் அகவல், பிள்ளையார் பெருங்கதை போன்றவற்றை மனனம் செய்யும் மரபும், தமது காரியங்களில் விநாயகரை முதன்மைப்படுத்தி வழிபாடாற்றுவதும், விநாயகர் வழிபாட்டை போற்றுவதையே காட்டுகிறது.

இதனைவிட அநுராதபுரம், மிகுந்தலைப் பகுதியில் அமைக்கப்பட்ட விநாயகர் ஆலயமும், பொலநறுவைப் பகுதியில் அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்ட விநாயகர் திருவுருவங்களும் ஈழத்தின் விநாயகர் வழிபாட்டை எடுத்துக் காட்டுகின்றன.

## விநாயகரை வழிபடும் முறை

கடவுளின் திருவுருவத்தை அமைக்கக் கல், மண், மரம், செப்பு என்பன பயன்படுத்தலாம். என ஆகமங்கள் கூறிய போதும் பிரணவ வடிவமான விநாயகரை வழிபடும் போது நினைத்த மாத்திரத்தில் இலகுவாக ஆவாகணம் செய்து வழிபட முடியும். பசுவின் சாணத்திலும், அரைத்த மஞ்சள் மாவிலும், சந்தனத்திலும், வெல்லத்திலும், அறுகம் புல்லிலும் இவரை ஆவாகணம் செய்து வழிபடலாம். நாம் பிள்ளையார் சுழி (உ) இட்டு எந்தக் காரியத்தை தொடங்குவதும், பிள்ளையார் வழிபாட்டையே கருதுகின்றது.

கோயிற் கிரியைகள், வித்தியாரம்பம், ஏர் பூட்டல் மனைபுகுதல், வீட்டுக் கிருத்தியங்கள், திருமணக் கிரியைகள், நூல்காப்புச் செய்தல் போன்ற இந்துக்களின் நற்கருமங்களுக்கு விநாயகர் பூசை செய்து "ஓம் கணபதி துணை" என உச்சரித்து வழிபடும் முறை உண்டு.

விநாயகர் வழிபாட்டுக்குரிய சிறப்பான நாள் வியாழக்கிழமை ஆகும். விநாயகரை வணங்கும் போது தோப்புக்கரணம் இட்டு வழிபடும் முறை புராணக் கதை ஒன்றுடன் தொடர் புடையதாகும்.

விநாயகரை வழிபடும் பொழுது மோதகம், பொங்கல், சுண்டல் என்பன படைத்து வழிபடுவர். இவ்வழிபாட்டினை ஔவையார் "பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை" எனும் அடிகள் மூலம் எடுத்துக் காட்டி, விநாயகரை வழிபடுவதனால் சித்திகளைப் பெறலாம் என்பதை கூறுகின்றார்.

விநாயகருக்கு அறுகம்புல், வன்னி, மந்தாரை, என்பனவற்றுடன் சிவ பூசைக்குரிய எல்லாப் பூக்களையும் பூசைக்குப் பயன்படுத்தலாம். பூசையின் போது அறுகம் புல் 21, பத்திரம் 21, புஷ்பம் 21, மோதகம் 21, பழம் 21, என இருபத்தொன்றாக வைத்து வழிபடுவர். இதற்குரியகாரணம் ஞானேந்திரியம் ஐந்து, அவற்றால் செயல்படும் காரியங்கள் ஐந்தும், அதுபோல கர்மேந்திரியங்கள் ஐந்தும், அவற்றால் செயல்படும் காரியங்கள் ஐந்தும் ஆக மொத்தம் இருபது இவற்றுடன் மனம் எனும் கருவியை சேர்த்து இருபத்தொன்று என்பது பொருளாகும்.

## விநாயகர் வடிவம் உணர்த்தும் தத்துவம்

தத்துவ ரூபமாகவே விநாயகர் அமைகிறார். இவரது அமைப்பில் எல்லாத் தெய்வங்களும் அடங்குகின்றன. எடுத்துக்காட்டாக நாபி – பிரம்ம ரூபம், முகம் – விஷ்ணு ரூபம், கண் – சிவரூபம், இடப்பாகம் – சக்தி ரூபம், வலப்பாகம் – சூரிய ரூபம், எனவே தெய்வங்களது கூட்டு அமைப்பாகவே இவர் உள்ளார். இதனால் "தத்வம் அஸி" எனும் பொருளாய் உள்ளார்.

முகம் மிருகம் போன்றது, உடல் தேவ உடலை ஒத்தது. கால்கள் பூதகணங்களை ஒத்தது, ஒற்றைக் கொம்பு ஆண் யானை, ஒடிந்தகொம்பு பெண் யானையை ஒத்தது. இப்படியாக தேவ உடலை பெற்றிருப்பதனால் உயர் திணையாகவும், மிருக முகத்தால் அஃறிணையாகவும் அதிசயிக்கத் தக்க வடிவத்தை உடையவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பானை வயிறு உலகை அடக்கியுள்ளதாகவும், யானைமுகம் ஓம் என்ற பிரணவப் பொருளையும், மோதகம் இன்ப வடிவானவன் என்பதையும், பெரிய செவி அன்பர்களது வேண்டுகோளை ஏற்பவன் என்பதனையும், ஒற்றைக் கொம்பு தியாக உணர்வையும் காட்டுகிறது.

விநாயகர் ஐந்தொழில் வடிவமாக உள்ளார் என பெரியவர்கள் கூறுவர். எந்த மந்திரங்கட்கும் மூல சக்தி பெற்ற சிறப்பான மந்திரம் "ஓம்" என்பது அந்த "ஓங்கார" வடிவிற்கே உருவமாக அமைந்தவர் கணபதி. இதனாலேயே எழுதத் தொடங்க முன்னும் பிள்ளையார் சுழி இட்டு வணங்கி எழுதத் தொடங்குவர்.

பெரிய தோற்றத்தையுடைய விநாயகர் எலியை வாகனமாகக் கொண்டிருப்பது அறிவுக்கு பொருத்தமற்றது எனினும், அது ஒரு தத்துவமாகும். எங்கும் வியாபகமாக இருக்கின்ற விநாயகக் கடவுள் அவ்வான்மாவின் அன்புக்கு கட்டுப்பட்டு, அந்த ஆன்மாவினது இதயக் கமலத்தில் வீற்றிருக்கிறார். விநாயகரது திருவுருவமே தத்துவப் பொருள் எனலாம்.

## விநாயகரின் மூர்த்தங்கள் - காரணப் பெயர்கள்

விநாயகருக்கு 16 வகையான மூர்த்தி பேதங்கள் கூறுகின்றார்கள். அவையாவன, பாலகணபதி, தருணகணபதி, பக்த கணபதி, வீர கணபதி, சக்தி கணபதி, துவிச கணபதி, பிங்கள கணபதி, உச்சிட்ட கணபதி, விக்கின கணபதி, ஹிப்ர கணபதி, ஏரம்ப கணபதி, இலட்சுமி கணபதி, மகா கணபதி, விஜய கணபதி, நிருத்த கணபதி, ஊர்த்துவ கணபதி, என்பனவாகும்.

விநாயகப் பெருமானின் திருநாமங்கள் அர்ச்சனை நாமாவளியில் கரணப் பெயர்களாய் உள்ளன. அவற்றுள் சில.

- ✪கஜாநநன் – யானை முகத்தையுடையவர்
- ✪ஸித்திப்ரதன் – எடுத்த கருமத்தை நிறைவேற்றுபவர்
- ✪கணாதிபன் – கணங்களுக்குத் தலைவர்
- ✪ஹேரம்பன் – போற்றுதலுக்குரிய வீரர்
- ✪பாலகப்பிரியன் – பிள்ளைகளுக்கு அன்பர்
- ✪வித்தியாராஜன் – கல்விக்கு அரசர்
- ✪மோதகபஷகன் – கொழுக்கட்டையுண்பவர்
- ✪விநாயகன் – தலைமை வகிப்பவர்
- ✪வீரகணபதி – வீரர்களுக்கு தலைவன்
- ✪லம்போதரன் – தொந்தி வயிறுடையவர்

எனவே பல சிறப்புக்களையும், தத்துவக் கருத்துக்களையும், பழமையும் உடைய விநாயக வழிபாடு ஆனது, இன்று இந்து மதத்திற்குரிய வழிபாடு என்பதனை விட, ஏனைய மதத்தவர்களால் வழிபடும் அளவுக்கு சகோதர வழிபாட்டு நெறியாக போற்றப்பட்டு வருகின்றது.

சித்தி விநாயகர் சரணம் சரணம் என்று விநாயகரைப் பணிந்து யாவருக்கும் நன்மைகள் அருள் பிரார்த்தித்து கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.


உசாத் துணை நூல்கள் :-

*1. இந்து நாகரிகம் ஐ. க. சி. குலரத்தினம்*

*2. கடவுளின் வடிவங்கள் – ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தா*

*ஆதிசங்கரர் அருளிய ஆறு, சமயங்கள் – அநுராகம் வெளியீடு*

*3. இருபாலை கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர். திருக்கோணமலை ஆலடி விநாயகர் ஆலய கும்பாபிஷேகமலர் .*


*பிறவியெனும் பொல்லா பெருங்கடலை நீந்தத் துறவியெனும்*
*தோர், தோணி கண்டீர் - நினைவுலகில் பொன் மாலை மார்பன்*
*புனற் காழிச் சம்பந்தன் தன்மாலை ஞானத் தமிழ்.*

- நம்பியாண்டார் நம்பி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அபிஷேகம்

"சாமான் விக்கிற விலையில மூணு நேரமும் பூசை பண்றதெண்டாச் சும்மாவா? ஊரவங்களுக்குக் கோயில் எண்ட ஒன்று இருக்கு என்ற நெனைப்பே இல்ல. விநாயகர் என்னப் பொறுத்துக் கொள்ளட்டும் இனியும் என்னாற் பொறுக்க முடியாது. இப்பவே சாவியப் பிடியுங்க நான் கோயிலப் பூட்டப்போறன்".

வண்ணக்கர் மாரிமுத்தர் பதறிப்போனார். தலைமுறை தலைமுறையாக ஊரவர் எல்லாருக்கும் எந்த விக்கினமும் வராதுகாத்து நின்ற விநாயகரின் கோயிலில் அயற்கிராமங்கள் எல்லாமே பொறாமைப்படும்படியாக யாழ்ப்பாணத்திலிருந்து பூசகரை வருவித்து மூன்று காலமும் தவறாது பூசை நடத்திக்கொண்டு வருகிறார். கோயிலைப் பூட்டப் போகிறேன் என்றுகுருக்கள் சொல்லக் கேட்டதுமே வண்ணக்கர் கல்லாய்ச் சமைந்து போனார்.

"என்ன பேசாம நிற்கிறீங்க வண்ணக்கர் ? எனக்கும் குடும்பம் இருக்கிறது. வாயும் வயிறும் இருக்கிறது. ஒரு தடவையா இரண்டுதடவையா சரியாக மூன்று போகத்திற்கு ஊரவன் எவனும் எனக்கு ஒரு சுண்டு நெல்லுக்கூடத்தரல்ல. நானும் எத்தன தரம் உங்களிட்டச் சொல்லீற்றன். போனமாரிப் போகம் மழையில்லாம அழிஞ்சிட்டுது. கோடைப் போகத்தில அதையும் சேர்த்துவாங்கித் தந்திடுவன் என்றீங்க தந்தீங்களா? ஊர் வெளிக்குத் தண்ணீர் வரல்ல என்று ஊரில எவனாவது சாப்பிடாம இருக்கானா? மேங்காமத்துக்கு, மல்லிகைத்தீவுக்கு, கொலனிக்கு என்று போய் அவனவன் பாட்டைப் பார்த்துக் கொன்றான். சுவாமி காரியத்துக்குக் கொடுக்கத்தான் ஊரவனுக்கு மனமில்லை. இவங்களுக்கு ஏன் கோயில்? நீங்கள் மட்டும் கவலைப்பட்டு என்ன ஆகப்போறது? சாவியப் பிடியுங்க என்னால இனி ஏதுமே செய்யமுடியாது".

நடராஜ குருக்கள் சாவிக்கொத்தை நீட்டியவாறே பொரிந்து தள்ளினார். சாவிக் கொத்தை வண்ணக்கர் வாங்கிக் கொள்ளாவிட்டால் அவர் முகத்திலேயே அதைத் தூக்கி எறிந்து விடுபவரைப்போல ஆக்ரோஷத்தோடு பேசினார்.

மாரிமுத்தர் தயங்கினார் சாவிக்கொத்தை வாங்கிக் கொள்வதா? தன் குடிவழியாக வரும் மரபை அதன்பிறகு இந்தத் தலைமுறையிற் தன்னிடம் கையளித்துப் விட்டுப் போன விநாயகரை பூசையின்றி தவிக்க விடுவதா? ஐயோ!

நினைவின் கொடூரத்தை அவராற் தாங்கிக் கொள்ள முடியவில்லை கண்களில் நீர் முட்டிற்று, மேற்துண்டால் துடைத்தபடியே "சற்றுப் பொறுங்கள் ஐயா, சுவாமி கைங்கர்யம் ஊர் நல்லா நொடிச்சுப் போச்சு. வெள்ளைக்காரன் போனபிறகு கொலனி கொலனி என்று அரசாங்கம் காட்டையெல்லாம் வெட்டி அழிச்சுப் புதுசா உண்டாக்கின வயல்களுக்குத் தண்ணியத் திருப்பினதால புராதன ஊர் வெளியெல்லாம் பொட்டல் நிலமாப்போச்சு. மூணுவருசமா இந்த ஊர் வெளிக்குத் தண்ணிவரல்ல. விநாயகப் பெருமானும் கண்திறக்கல. இல்லாம போனா மாரி கூடப்பொய்க்குமா? எதுக்கும் காலம் இப்படியே இருக்கப்போறல்ல எங்கட எம்பிக்கிட்டயும் சொல்லியிருக்கம் மேலைக்கு அல்லைக்குளத்தில தண்ணியத்தேக்கி ஊர்வெளிக்கு விடுவாங்களாம். அதுக்கிடையில் நான் விக்காததவித்து வைக்காதத வைத்து உங்க வரியைத்தந்திடுவன் பூசைய நிறுத்திடாதிங்க ஐயா"

"நீங்க மட்டும் ஏன் ஊர், ஊர் கோயில் கோயில் என்று கஷ்டப் பட வேணும்? எல்லாருக்குந் தீர்ந்தது தானே கன்னங்குபாவானுக்கும் என்று சொல்லிப்போட்டு இருக்கிறது தானே. இப்ப காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிப் போச்சு. மூதூரில தியேட்டரில வாற ஒரு புதுப்படத்தையும் ஊர் இளந்தாரிகள் விட்டு வைக்கிறதில்ல வண்ணக்கர் ஆனாச் சுவாமி காரியத்துக்குக் கொடுக்கமட்டும் கைநீளாது. நானும் மூணுபோகத்திற்குப் பொறுத்துப் பாத்திற்றன் இனி என்னால ஏதுமே செய்ய முடியாது. உங்களைக் கஷ்டப்படுத்தவும் விரும்பல்ல இந்தாங்க சாவியைப் பிடியுங்க.''

நடராஜ குருக்கள் சாவிக் கொத்தை வண்ணக்கரின் கைகளிற் திணித்து விட்டு மேலே பேச்சுக்கு இடம் வைக்காதவராக அவ்விடத்தை விட்டுப் போய்விட்டார்.

அரை அடி நீளமான தலைவாயிற் சாவி, அதனிலும் சற்றே சிறிய மடைப்பள்ளிச்சாவி, இன்னும் சற்றுச் சிறியதான வேறு மூன்று சாவிகளையும் கொண்ட அந்தச் சாவிக் கொத்து, வண்ணக்கரின் கைகளில் ஊரின் பாவங்கள் எல்லாமே ஒன்று திரண்டு சேர்ந்து கொண்டதைப் போல ஒரே கனமாய்க் கனத்துக் கொண்டிருந்தது.

அது வெது வெதுப்பும் இறுக்கமும் கொண்ட பங்குனி மாதத்து காலைப் பொழுது. ஊருக்குக் கிழக்கே உயர்ந்து நின்ற விநாயகர் ஆலயக் கோபுரத்திற்கு மேலே ஒட்டுண்ணியாக வளர்ந்த அரசங் கன்றுக்கும் மேலாகச் சூரியன் எழுந்து கொண்டிருந்தான். இன்னுஞ் சற்று நேரம் போனால் உச்சிப்பொழுது ஊரையே வறுத்துக் கொட்டும் ஆனால் இப்போதே வண்ணக்கரின் நெஞ்சம் வாணலியில் வறுக்கப் படுவதாத் துடித்தது!.

''மாணிக்க மள்ளிப்பிச்சை கொடுத்திடும் மாவலிகங்கை நாடேங்கள் நாடே'' என்று இளவயதிலே மூதூர் வேதப்பள்ளிக்கூடத்து வேதநாயக வாத்தியார் அவருக்குச் சொல்லிக் கொடுத்த கவிதையடிகள் கூறும் தனது கொட்டியாரப் பற்றையிட்டு வண்ணக்கர் என்றைக்குமே பெருமைப்படுவார். அதிலே உண்மையும் இருந்தது. மாவலியின் ஒரு கரமான வெருகல் கங்கையின் செம்புலப் பெயல் நீர் அல்லைக்குளம் என்ற உள்ளங்கையில் நிறைந்து, வாய்க்கால்கள் என்ற விரல்களினூடே வழிந்தோடுகையில், சின்னி விரலாற் கொட்டிய நீரே ஊரைச்சுற்றியுள்ள வயல் வெளியைப் பாசனஞ் செய்யப் போதுமானதாக இருந்தது. அப்போதெல்லாம் ஊர் வெளியான பிரம்புவெளி முப்போகமும் விளையும் ஆடி அமாவாசைக்குக் கங்கையில் தீர்த்தமாடப்போகையில் கோடைப் போக அறுவடை முடிந்திருக்கும் பின்னர் புரட்டாசி மாதம் வெருகற் சித்திர வேலாயுதரிடம் போகையில் இரண்டாம் போகம் சீனட்டி விளைந்திருக்கும். அதன் பின்னர் இருக்கவே இருக்கிறது மாரிப் போகம்.

இப்போது அவையெல்லாம் பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போயின. புதிதாக வந்த சுதந்திர அரசு மாவலித்தேவியின் வெருகல் கங்கை என்ற மணிக்கரத்தை மணிக்கட்டுக்குமேலே தறித்துவிட அல்லைக்குளம் என்ற உள்ளங்கை வற்றி வரண்டுவிட்டது. அதன் பின்னர் விரல்களாய வாய்க்கால் மூலம் தண்ணீர் பாயாததினால் ஊரே வரண்டு விட்டது. ஊரைச்சுற்றிக் கண்வைத்த தொலைவிற்குப் பரந்து கிடந்த வயல் வெளி வரண்டு கல்லாய்க், கரட்டியாய் வானத்து மழையை எதிர்பார்த்துக் கவந்தப்பசியோடு 'கமர்வெடித்து' வாய்பிளந்து நின்றபோது மாரியும் பொய்த்துவிட்டது.

ஊரே சுடுகாடாகிவிட்டது!

முப்போக விளைச்சலில் நெல்மகளாகக் குவிந்திருந்த முற்றத்துப் பட்டறைகள் எல்லாம் கிணற்று நீரை நம்பிய அவரைப்பந்தல்களாக மாறிவிட்டன. விவசாயம் என்ற பரம்பரைத்தொழில் 'மண்ணைக்கிளறி மணகவ்வும்' சம்பிரதாயமாகி விட்டது.

இந் நிலையில் போகத்திற்குப் பத்து நாழி என்ற கோயில் வரியைக் கொடுக்க எவரிடமும் வக்கில்லை.

ஆனாலும் நடராஜ குருக்கள், ஊரில் முப்போகம் விளைந்து, போகத்திற்கு பத்து நாழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த 'பொற்காலத்தில்' நிறையவே சம்பாதித்திருந்தார். அவருக்கு கெட்டியாரப்புரப் பற்றிலே கொடுக்கல் வாங்கல் உண்டு. ஐந்து சத வட்டி, பத்து நாழி விவகாரத்தைப் பொருட்படுத்தாத வகையில் வாழவும் அவருக்கு வழிசெய்தது. அதற்கும் மேலால் ஊரின் வறுமையையும் தரித்திரத்தையும் தன் தலையில் சுமந்து கொண்டு, பூபாரந்தாங்கிய ஆதிசேடனாய் ஊரையும் அதன் கௌரவத்தையும் விட்டுக் கொடுக்காத வண்ணம், ஊரவரிற் சுமத்தப்பட்ட வரியைக் கொடுப்பதற்கு வண்ணக்கரின் மனைவியாகிய இளையம்மாவும் பொன் காய்த்த மரமாய்த்தான் இருந்தாள், அந்தப் பொன் மரமும் மொட்டையாகி இனிக் குன்றி மணி கூடப்பெயராது என்ற நிலையில் சாவிக்கொத்து வண்ணக்கரிடம் கொடுக்கப்பட்டுவிட்டது.

கோயில் பூட்டப்பட்டுவிட்டது. இனிமேற் கூறு சங்கு தோல் முரசு கொட்டோசை' கூட விநாயகரின் காதுகளில் விழாது.

கவலை, தரித்திரம் என்ற நியதிகளிற் சுழலும் ஊர் என்ற கிரகபாரத்தைச் சாவிக்கொத்தின் ரூபத்திற்சுமந்த வண்ணம் வண்ணக்கர் மெதுவாகத் தம் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தார். கோயில் வாசலைத் தாண்டும் போது சாவிக்கொத்தை ஏந்தியகைகளைத் தலைமேற் கூப்பி "விநாயகா இந்த எளியவனை இன்னமும் சோதிக்கிறாயா, என்று கண்களில் நீர் வரக்கேட்டார்.

ஆனாலும் விநாயகர் செவிகள்தான் மூன்று ஆண்டுகளாக அடைந்து கொண்டு விட்டதே.

வண்ணக்கர் மேலே நடந்தார், விநாயகர் அவர் உள்ளத்தைத் தீய்த்துக் கொண்டிருக்கையில் உச்சிப்பகலவன் அவர் உடலைத்தீர்த்துக் கொண்டிருந்தது.

வீட்டிலே அன்று வண்ணக்கர் சாப்பிடவில்லை. சாய்கதிரையிற் கிடந்த அவரை, அவர் பத்தினி "சாப்பிடுங்களேன்" என்று அழைத்தபோது அவள் கழுத்திலே மஞ்சட் கயிற்றிலே தொங்கிக் கொண்டிருந்த தாலியை வண்ணக்கரின் கண்கள் பரிதாபத்தோடு பார்த்தன.

சாய்பொழுதாகியும் வண்ணக்கர் சாப்பிடவில்லை. கையிற் பிடித்திருந்த சாவிக்கொத்து அவர் மனைவிக்கு விசயத்தை ஓரளவுக்கு விளக்கிற்று. அவள் கவன்று கொண்டிருக்கையில் வண்ணக்கர் எழுந்து நடந்தார்!

ஊரவருக்கும் விவகாரம் தெரிந்து எல்லோரும் கவலையோடும், பரபரப்போடும் 'கொம்புப் புளிய மரத்தின் கீழ்க் கூடினர் தாழக் கிளைபரப்பிக் கருங்காயும் செம்பழமுமாகக் குலுங்கி நின்றாலும் அப்புளிய மரம் ஊரவரின் மதிப்பிற் சற்றுக் குறைந்தே இருந்தது. ஏனென்றால் அடைமழைக்கென்று ஒதுக்கப்பட்ட ஐப்பசியையும் தாண்டிக் கார்த்திகைப் பிறை சித்திரை நிலவாய் எறித்த போது ஊரவர்கள் பத்தினியம்மனைத் தியானித்து அம்மரத்தின் கீழ்த்தான் மழைக்காகக் கொம்பிழுத்தனர். அப்படியிழுத்தும் அந்த வருடம் மழை பெய்யவில்லை. இந்த நிலையிற் கொம்புப்புளி இருந்தென்ன? இல்லாவிட்டால் என்ன?

ஆயினும் அங்கே கூட்டம் கூடியிருந்தது.

இத்தனை நாளும் போகத்திற்குப் பத்து நாழி என்ற குருக்களின் வரியை வண்ணக்கர் மேற்சுமத்தி விட்டு நிர்ச்சலனமாக இருந்த ஊர்ப்பெரியார்கள் பலருக்குக் கோயில் பூட்டப்பட்ட செய்தி பேரிடியாகத்தான் இருந்தது.

"கோயில் பூட்டியாயிற்றா? அப்படியானால் கோயிலைத்திறந்து மறுபடியும் பூசைசெய்வதாயின் முதலில் அபிஷேகம் பண்ண வேண்டியிருக்குமே. அதற்குக் கோணேசர் கோயிற் குருக்களோ, அல்லது யாழ்ப்பாணமிருந்து அவருக்கும் பெரிய குருக்களோ அல்லவா வரவேண்டும். ஆயிரம் ஆயிரமாகச் செலவாகும்" என்று எல்லோருமே அங்கலாய்த்தார்கள் தலைமுறை தலைமுறையாகச் சலம்பூவொடு தூபம் மறந்தறியாத உள்ளுணர்வு அவர்களுக்கு ஒரு பயங்கலந்த அருட்டுணர்வானது. ஆயினும் வெறுங்கையால் முழம் போட முடியுமா? விநாயகா! இது என்ன சோதனை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் கண்ணீர் விட்டனர்.

ஒரே குலம் ஒரே கோத்திரம் பேசும் ஊரின் ஐந்து குடிகளுக்கும் தனித்தனியே ஐநூறு ரூபாய் வரி விதிக்கப்பட்டது.

கூட்டம் கலைந்தது
ஒருமாதம் ஓடி விட்டது.

அன்று சித்திரா பௌர்ணமி, வானத்து வட்டமதி தேய்த்து மினுக்கிவிட்ட வெள்ளித்தட்டைப் போலத் தன்முழுப்பிரமையோடும் வான வீதியிற் பவனி வந்து கொண்டிருந்தது. அமைதியாக இருந்த அந்த ஊரிலே ஒலிபெருக்கியிற் சுந்தராம்பாள் ஞானப்பழத்தைப் பிழந்து கொண்டிருந்தாள்.

நிலாவுக்குப் போட்டியாகக் கோயில் வீதியெங்கும் பெட் ரோமக்ஸ் விளக்குகள்.

அவை சிந்தும் ஒளி வெள்ளத்திற் கடைகள் அவைகளிலே கண்ணாடிவளையல்கள் சீப்பு, சோப்பு, கண்ணாடி....

வண்ணக்கர் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தார். அபிஷேகம் என்றாற் சும்மாவா?

நெல், பால், மாவிலை, மாஞ்சுள்ளி, முடித்தேங்காய் – அப்பப்பா எத்தனை பொருட்களை அவர் தேட வேண்டும்.

ஆயினும் அவர் உள்ளத்திலே நிறைவு விநாயகருக்கு இனித்தினமும் பூசை நடக்கும் என்றதிருப்தி, அவர் உள்ளத்தின் உள்ளொளி அவர் முகத்தில் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது.

அபிஷேகச் செலவுகளுக்காக ஆட்டை விற்று அருமையாய் வளர்த்த கன்றைவிற்று, மனைவியின் கைவளையல்களை விற்று, வரி கொடுத்த கிராமத்தவர் முகங்களிலும் ஒரு பொலிவு!

போகத்துக்குப் பத்து நாழி என்ற குருக்களின் வரியை எப்படிக் கொடுப்பார்களோ!

மந்திர உச்சாடனம் பண்ணிக் கொண்டிருக்கும் கோணேசர் கோயிற் குருக்களுக்கு நடராஜக்குருக்கள் பரிசாரகனாக உதவிக் கொண்டிருந்தார்.

பத்து வருடங்களாகத் தினமும் பூசைசெய்து வந்த போது எனக்குக் கிடைக்காத தட்சணையும் தானங்களும் ஒரு நாளைக்காக வந்தவர் கொண்டு போகப்போகிறாரே என்ற ஆதங்கம் அவருக்கு,

ஆனால் ஊரவர்களுக்கு ஒரு நிம்மதி! அபிஷேகம் நடக்கிறது இனிமேல் விநாயகருக்குத் தினமும் பூசை நடைபெறும் என்று கோணேசர் கோயிற் குருக்களின் மந்திரோச்சாடனம் ஒலிபெருக்கியின் மூலம் காற்றிலே மிதந்து ஊரையே நிறைக்கிறது.

வ. அ. இராசரெத்தினம்
*சிந்தாமணி 19.11.66* — *மூதூர்*

## நோயின்றி வாழ

பாழ்மனையும் தேவ குலனும் சுடுகாடும்
ஊரில் வழியெழுந்த ஒற்றை முதுமரனும்
தாமே தமியர் புகா அர் பகல்வளரார்
நோயின்மை வேண்டு பவர்.

பாழடைந்த வீட்டிலும், கோயிலுக்குள்ளேயும், சுடுகாட்டிலும் ஊரில்லாத பாதையோரம் இருக்கும் வயதான ஒற்றை மரத்தின் கீழும், தனியாகப் போய்த் தங்க மாட்டார்கள். பகல் நேரத்தில் சென்று படுத்துறங்க மாட்டார்கள் நோயின்றி வாழ விரும்புபவர்கள்.

– ஆசாரக்கோவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர வை !

1. சித்தி விநாயகனே ! சிவனார் முதல் மகனே !
முத்தி அருளும் முதல்வோனே ! – இத்தரையில்
வாழும் அடியாரை வதைக்கும் செயல்மாற்றி
ஆளுவாய், கேட்டோம் அதே !

2. பள்ளிக்குடியிருப்பின் பழமைக்கணபதியே !
உள்ளத்தில் என்றும் உறைவோனே ! – கொள்ளாத
அருளைப் பொழியாயா ? அடியாரைக் காவாயா ?
இருளைப் போக்காயா இனி ?

3. கொம்பு விளையாட்டைக் குதுகலமாய்க் கொண்டாடி
அம்புவியில் வாழ்ந்த அடியாரின் – நம்பிக்கை
சீர்கெட்டுப்போகாமல் சித்தி விநாயகனே
நேர்செய்து வைப்பாய் நிலை !

4. மக்கள் அவலங்கள் மறுபடியும் சீராகத்
தக்கவழிவகைகள் தான்செய்வாய் ! – சிக்கல்கள்
தீர்க்க முனைவோரின்செருக்கை அகற்றி நமைப்
பார்க்கவே செய்யவைப் பாய் !

5. உன்னை நினையாமல் ஒருபோதும் விட்டதிலை !
பின்னை எவரையுமே பின்பற்றோம் ! – முன்னாளில்
கயமுகனைச் சங்கரித்த கணபதியே இன்றுள்ள
கயவரையும் ஆராய்ந்து காண் !

6. நாட்டைக் கெடுக்கின்ற நாசப்பெரும்போரை
வேட்டுக்களாலேயே வீழ்த்திவிடு ! – கூட்டுக்குள்
கிளியாய்க் கிடப்போர்கள் கிளம்பிப்பறந்துவர
வழிசெய்துரிமைவர வை !

7. கொம்பை முறித்துவிழாக் கொண்டாடிடுவோம் நாம்,
வம்பு மிருகங்கள் வந்தக்கால் ! – நம்பியுனை
களத்தில் இறங்கவுள்ளோம், காக்கும் வலிமையினை
உளத்தில் தருவாய் உடன் !

8. எத்திக்கில் உள்ளோரின் எல்லாத் துயர்களையும்
சித்திவிநாயகனே தீர்த்துவிடு ! – முத்தியுடன்
வல்லபையும் சேர்கின்ற வடிவினையும் காட்டிடுவாய் !
எல்லாம் நலமே இனி !

"தாமரைத்தீவான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய அமைப்பு சிற்ப சாஸ்திரம்

எங்கும் பரந்து வியாபித்திருக்கின்ற பரம்பொருளை மிக எளிதில் அடையக்கூடிய இடம் ஆலயம். அனுபூதிமான்களாகிய சிவனடியார்களும் அனுபூதி மான்களை நாம் நினைத்தபடி தரிசிக்க முடியாது. எனவே ஆலயம் எமக்கு இன்றியமையாததொன்றாகும். ஆலய அமைப்புக்கள் யாவும் உள்தத்துவக் கருத்துகளின் அடிப்படையில் தான் நிர்மாணிக்கப் படுகின்றன என்று ஆகமங்கள் கூறுகின்றன.

ஆலயம் என்பதன் பொருள் எல்லாம் ஒடுங்கும் இடம் என்பதைக் குறிக்கின்றது. ஆலயம் : ஆ – என்பது பசுவையும், லயம் – என்பது ஒடுக்கத்தையும் குறிக்கும். பசு என்பது ஆன்மா தன் மும்மலங்களையும் நீக்கி இறைவனிடம் ஒடுங்குவதற்குரியஇடமாகத் திகழ்வது ஆலயமாகும். ஆலயமானது நமது உடலின் அமைப்பிலேயே அமைக்கப்படுவது கவனிக்கத்தக்கது. ஆலயம் அதன் கோபுரம் தேர் என்பது சரீரத்தையும், இப்பிரபஞ்சத்தையும் நினைவூட்டும் வகையில் அமைக்கப்படுகின்றன.

ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்ற தோற்றத்தில் ஆலயமும் அமைகின்றது. மூலஸ்தானம் அல்லது கருவறை சிரசினைக் குறிக்கும். அர்த்த மண்டபம் கழுத்தினையும், மஹா மண்டபம் மார்பினையும், தரிசன மண்டபம் வயிற்றையும், அடுத்த மண்டபங்கள் கால்களையும், ராஜ கோபுரம் பாதங்களையும் குறிக்கின்றன.

யோக மார்க்கத்தில் ஆறாதாரஸ்தானங்கள் என மூலாதாரம், சுவாஸ்திஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஜ்ஞை என்பனவற்றை முறையே கொடிஸ்தம்பத்தடி. பலிபீடம், தரிசன மண்டபம், மஹா மண்டபம், அர்த்த மண்டபம் கர்ப்பக்கிரகம் என்பனவாக அமைகின்றன. சகஸீராரத்தை (ஆயிரமிதழ் கமலம்) நினைவூட்டவே கர்ப்பக்கிரகத்தில் கமல விளக்கு அமைகின்றது.

ஸ்தம்ப மண்டபத்திலே கொடித்தம்பத்திற்கு அருகிலே பலிபீடமும், அதையடுத்து நந்தியும் அமைந்திருக்கும். இவை பதி, பசு, பாசம் என்கின்ற முப்பொருளை விளக்கி நிற்பவை.

நந்தியானது சிவனை நோக்கியவாறு (மூல மூர்த்தியைப் பார்த்தபடி) அமைகிறது. பலிபீடம் மலநீக்கத்திற்கு அறிகுறி. நந்தி, ஆன்மா. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை பலியிட்டு, பதியாகிய பரதத்தை நாடவேண்டும் என்பதைக் குறிக்கின்றது. ஆலய அமைப்புகள் ஒவ்வொன்றும் பல தத்துவங்களை உள்ளடங்கியுள்ளது. இவ் வாலயங்களைச் சாஸ்திர முறைப்படி அமைப்பதற்கு சிற்ப சாஸ்திரங்கள் வழிகாட்டுகின்றன.

## *ஆலய சிற்பக்கலை*

நம் ஒப்புயர்வற்ற நுட்பக்கலையின் தனிச் சிறப்புடையது. அது இறைவழிபாட்டுடன் இணைக்கப் பட்டுள்ளது. உள்ளத்தில் எழும் தோற்றத்தை உருவத்திலே வடித்து பார்க்கும் கலை.

## *சிற்பக்கலை*

எல்லாம் வல்ல இறைவனைப் பல உருவங்களில் நினைத்து சாஸ்திரங்களுக்கும், வேதங்களுக்கும் விளக்கம் தந்து, அழகுற அமைத்து தருவது ஆலயச் சிற்பக்கலை.

## *கோபுர கட்டட அமைப்பும், அதன் பெயரும்*

1. வட்டமாயிருக்கும் கோபுரங்களுக்கு விருத்த விமானம்.
2. சதுரமாய் இருக்கும் கோபுரங்களுக்கு சதுரஷ விமானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆறுபட்டையாய் இருக்கும் கோபுரங்களுக்கு சட்கோண விமானம்.

4. எட்டுப் பட்டையாய் இருக்கும் கோபுரங்களுக்கு அஃஷ்ட கோண விமானம்.

5. எதிர்புறம் மரமாடி போலும் மூலையாய் பின்னால் யானை முதுகு போலும் இருக்கும் கோபுரங்களுக்கு கெஜம், பிரஷ்ட விமானம், துங்களை மாட விமானம், அத்தி புஷ்ட விமானம் என்று பெயர்.

6. இரண்டு பக்கம் மரமாடியும் ஒன்றுக்கு மேற்பட்ட கலசங்கள் இருக்கும் கோபுரங்களுக்கு சக்தி நீள, மகாதுவார கோபுரம் இராஜ கோபுரம் என்று பெயர்.

*விமான கட்டட அளவும், அதற்குரிய பெயரும்.*

1. அகலம் கொண்ட அளவு உயரம் வைத்துக் கட்டிய விமானத்திற்கு யேகபூமம் (ஏகதள விமானம் எனப் பெயர்)

2. அகலம் ஏழு பங்கு செய்து, உயரம் 10 பங்கு வைத்துக் கட்டிய விமானத்திற் சாந்தீக விமானம் என்று பெயர்.

3. அகலம் 1 பங்கு, உயரம் 1 ½ பங்கு வைத்துக் கட்டிய விமானத்திற்கு பவுஷ்டிக விமானம் எனப் பெயர்.

4. அகலம் 1 பங்கு, உயரம் 1 ¾ பங்கு வைத்துக் கட்டிய விமானத்திற்கு விமானம் எனப் பெயர்.

5. அகலம் 1 பங்கு, உயரம் 2 பங்கு வைத்துக் கட்டிய விமானத்திற்கு அற்புத விமானம் எனப் பெயர்.

*கற்பக்கிரக கட்டட வேலை அமைப்புக்கள் 3 வகையாக உள்ளது.*

1. உத்திர மட்ட வேலை அமைப்பு
2. இரட்டைப் பஞ்சாங்க வேலை அமைப்பு
3. முகபத்திர வேலை அமைப்பு.

உத்திர மட்ட வேலை அமைப்பு சாதாரணமான வேலை அமைப்புக்களைக் கொண்டது.

இரட்டைப் பஞ்சாங்க வேலைஅமைப்பு, நடுத்தரமான வேலை அமைப்புக் கொண்டது.

முகபத்திர வேலை அமைப்பு, அதிக மடிப்பு வேலைகளுடன் முகபத்திர வேலைகளைக் கொண்டது. இது உன்னதமான வேலையமைப்பாகும்.

இவை கற்பக்கிரக கட்டட அமைப்புக்களாகும். இவ் வேலை அமைப்புக்கள் வியாள மட்டம் வரை செய்யப்படும்.

மேல் விமான அமைப்புகள் ஏகதளம், துபிதளம், திரிதளம், பஞ்சதளம் எனத் தொடர்கின்றது.

இவ்வேலைகளுக்கு தனித்தனியாக கணக்கீடுகள் உள்ளன, அக் கணக்கீடுகளை சரியான முறையில் பங்கீடு செய்து வேலைகளை அமைத்தல் வேண்டும்.

சாஸ்திர முறைப்படி ஆலயங்களை அமைத்து மூர்த்திகளை மூர்த்தி பதவிஞ்யாசப் படி ஸ்தாபனம் செய்து, சிலா விக்கிரகமாக இருந்தால் அஸ்ட பந்தனமும், தாமிர விக்கிரகமாக இருந்தால் திரிபந்தனமும் செய்தல் வேண்டும். இதில் முக்கியமாக அவ் மூர்த்திகளுக்குரிய யந்திரங்களைச் செப்பு, பொன், வெள்ளி தகடுகளில் வரைந்து 1 பட்சம் (1 பட்சம் 15 நாட்கள்) 2 பட்சம் அல்லது ஒரு மண்டலம் யந்திர பூசை செய்து, யந்திர ஸ்தாபனம் செய்ய வேண்டும். இவ்யந்திரங்கள் தான் அருட் செறிவை நோக்கி செறிய வைக்கும் சக்தியுடையது. ஆலயத்தில் நடைபெறும் அபிஷேகங்கள், மந்திரங்கள், முத்திரைகள் என்பன இவற்றிற்கு மேலும் சக்தியுடையதாகின்றது. இவ் அருட்பலனை கொடுப்பதே ஆலயத்தில் நடைபெறும் நித்திய பூசைகளாகும்.

இங்ஙனம் ஆக்கப்படும் அருளானது ஆலயத்தைச் சுற்றி நாற்புறமும் பரவி நாட்டிற்குப் பல நன்மைகளைப் பயக்கும். இந்த அறிவும், அன்பும் கலந்த உண்மையான பக்தியுடன் ஆலய தரிசனம் செய்வோர் அங்குள்ள அருள் நெறியினால் அடையும் பலன் அனுபவம் எனப்படும் ஆகவே, ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொம்பு முறிப்பு விளையாட்டு

மட்டக்களப்பு மாநில மக்களின் பாரம்பரியக் கலைகளில் கொம்பு முறிப்பு விளையாட்டும் ஒன்றாகும். தேத்தாத்தீவு, காரைதீவு, தம்பிலுவில், களுதாவளை, மண்டூர், வந்தாறுமூலை போன்ற கிராமங்களிலும் திருகோணமலை மாவட்டத்தில் பள்ளிக்குடியிருப்பு, மல்லிகைத்தீவு, ஈச்சிலம்பற்று பிரதேசங்களிலும் இக்கலையாடல் பெருவழக்காகக் காணப்பட்டு இன்று அருகி வருகின்றது. மட்டக்களப்பு பிரதேசம் விவசாயப் பகுதியாக இருப்பதால் அறுவடை முடிந்து ஓய்வாக மக்கள் இருக்கின்ற காலப் பகுதியிலேயே இவ்வாறான கலையம்சங்களைப் பழகி அரங்கேற்றம் செய்வர். ஒரு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் இரு வேறு பிரிவுகளாகப் பிரிந்து கொம்பு முறிப்பு விளையாட்டைச் செய்வர். இவ்விளையாட்டு கண்ணகி வழிபாட்டுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய சமயக் கலையாகக் காணப்படுகிறது.

கண்ணகி வழிபாடு மட்டக்களப்பு மாநிலமெங்கணும் மிகவும் பிரபல்யம் வாய்ந்து காணப்படுகின்றது. கண்ணகி அம்மன் கோயில்கள் இல்லாத கிராமங்களே இல்லையென்று சொல்லுமளவிற்கு கோயில்கள் காணப்படுகின்றன. கண்ணகி அம்மன் சடங்குகள் நடைபெறும் காலப்பகுதியில் இவ்விளையாட்டு இடம்பெறும். இக் கொம்பு விளையாட்டு ஏன் எழுந்ததென்பதற்கு நீதி தவறிக் கோவலனைக் கொலை செய்வித்த பாண்டிய மன்னனைப் பழி வாங்கியும், மதுரை மாநகரினை எரியூட்டியும் சினந் தணியாத கற்புக்கரசி கண்ணகியின் சினத்தைத் தணித்து அவளைக் குளிர்விப்பதற்குமாக இடையர் குல இளைஞர் ஒரு காதல் கலந்த விளையாட்டாக இக் கொம்பு விளையாட்டினைச் செய்தனர் எனக் கூறப்படுகின்றது. அதன் தொடர்பாக நடைபெறுவதே மட்டக்களப்புப் பகுதிகளில் இடம்பெறும் கொம்பு விளையாட்டாகும். கொம்பு முறிப்பு ஒரு கிராமத்தில் தொடங்குவதற்கு முன்னர் இரு பிரிவுகளாக அக்கிராமத்து மக்கள் பிரிவர். இதனை வடசேரி, தென்சேரி என்று பெயரிட்டழைப்பர். வடசேரியைக் கோவலனுடைய கட்சி – சுவாமி கட்சி என்றும், தென்சேரியைக் கண்ணகியுடைய கட்சி – அம்பாள் கட்சி என்றும் கூறுவர். அம்மை, வைசூரி, கண்நோய் முதலான கொடிய நோய் நொடியினின்றும் நீங்கி மழை வளமும், செல்வமும் ஏற்பட வேண்டுமென்பதற்காகவே இக்கலையாடலை மக்கள் கண்ணகி வழிபாட்டுடன் சேர்த்துச் செய்கின்றனர். கொம்பு விளையாட்டின் சிறப்பம்சமாகப் போர்த்தேங்காய் உடைத்தல், கொம்பு முறித்தல், கொம்பு தட்டு எடுத்தல், தேர்க்கல்யாணம், குளிர்த்தி பாடுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

கொம்பு விளையாட்டில் முதலில் முறிக்கப்படும் கொம்பு கொழு கொம்பு அல்லது விளையாட்டுக் கொம்பு என்று கூறப்படும். இதனைத் தொடர்ந்து கூடாரக் கொம்பு, கொம்புத் தட்டுக்கொம்பு, ஏடகக் கொம்பு, தண்ணீர் கொம்பு என்ற நால்வகை நிகழ்ச்சிகள் நடைபெறும். இக்கொம்புகள் நன்கு உறுதியான கரையாக்கு மரத்தினால் ஆனவையாக இருக்கும். கருவீரம் என்றும் வெட்சி என்றும் இம்மரம் இலக்கியப் பெயர் பெறும். வடசேரிக் கொம்பு 90 பாகை விரிவுடையதாகவும், தென்சேரிக் கொம்பு அதிலும் சற்று ஒடுங்கியதாகவும் இருக்கவேண்டியது பொது விதியாகும். இரு சேரிக் கொம்புகளையும் அணைத்துக்கட்டும் இரு கம்புகளும் 'பில்லி' எனப்படும். பில்லி கட்டப்பட்டு கொம்பே வியைாட்டுக்குத் தகுதியான கொம்பாகக் கணிக்கப்படும். ஒரு மரத்திற் பூட்டிய அரிப்பு (சிறுவட்டம்) எனப்படுவதான கயிற்றில் தென்சேரியான் கொம்பு தொடுக்கப்படும். அக்கொம்பிற் கொழுவிய வடசேரிக் கொம்பிலே இன்னோர் அரிப்பினைப் பிணைத்து அதிலே பெரிய வடமொன்றை மாட்டுவர். அவ்வடத்தைப் பிடித்து பலர் இழுக்கும் போது இரு சேரியையும் சேர்ந்த திறமையாளர் சிலர் தத்தம் கொம்புகளிற் பல்வாய் (கொம்பின் தலைப் பகுதி), குச்சி (கொம்பின் வளைந்த இடத்து நடு ஆணி), முதுகுமரம் (கொம்பின் தலைப் பகுதி), பல்லி (கொம்பின் இரு புறமும் அணைகட்டிய தடிகள்) என்னும் உறுப்புக்களையெல்லாம் முறைப்படி பிடித்துக் கொள்வர். அரிப்பிற் பிணைந்த பெரு வட்டத்தினை இரு சேரிப் பொது மக்களும் இழுப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பலருடைய இழுவைப் பொறுப்பினால் இரண்டிலொரு கொம்பு முறியும். உடனே வென்ற பகுதியார் தமது வாரத்தின் பெயரைச் சொல்லி அதற்கு வெற்றியென்று கூவி ஆடிச் செல்வரெனப் பொதுவாக கொம்பு முறிப்புப் பற்றி அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

கொம்பு முறிக்கப்பட்ட பின்னரே மிகவும் சிறப்பான முறையில் பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. வடசேரி, தென்சேரி ஆகிய இரு கட்சியாரும் அலங்கரிக்கப்பட்ட பூப்பந்தல்களில் தத்தம் கொம்புகளை வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்வர். இதனோடு நன்கு அலங்கரிக்கப்பட்ட கண்ணகி அம்மன் சிலையையும் சேர்த்து வைத்துக் கொண்டு வீதிவலம் வருவர். அவ்வேளையில் வெற்றி பெற்ற கட்சியினரின் வெற்றிப் பாடல்கள் உடுகுச் சிந்து, ஊர்சுற்றுக் காவியம் என்பன படிக்கப்படும். சந்திகள் தோறும் கொம்பைத் தாங்கிச் செல்லும் பூப்பந்தரை நிறுத்தி வசந்தன் கூத்து, கும்மி முதலான ஆடல்களைச் செய்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்வர். இதிற் கோலம் புனைவோர் வேடன், குறவர், போர்வீரன், முடிமன்னன், முனிவர், ஆண்டி, விகடன் போன்ற தோற்றங்களில் நடிகர்கள் வந்து மக்களைப் பெருமகிழ்ச்சியிலாழ்த்துவர். இளைஞர்கள் வசந்தன் ஆட்டத்திலும், நாட்டுக்கூத்திலும் ஈடுபட இள மங்கையர் குரவை அயர்தலிலும் கும்மி அடித்தலிலும் தத்தம் திறமையைக் காட்டிச் செல்வர். கொம்புகள் ஊர்வலம் கொண்டு செல்லும் பொழுது நிறுத்தி வைக்கப்படும் சந்திகள் இன்றும் மட்டக்களப்பின் சில கிராமங்களில் பெயர் பெற்று வழங்குகின்றன. எடுத்துக்காட்டாக, களுதாவளைக் கொம்புச் சந்தி, காரைதீவு கொம்புச் சந்தி என்பனவற்றைக் கூறலாம். மண்டூரிற் கொம்பு வம்மியடி என்னும் ஓர் இடம் இன்றும் உள்ளது. மட்டக்களப்பின் கிராமங்கள் தோறும் நடைபெறும் இக்கலையாடல் சிங்கள மக்களிடையேயும் உண்டு. போர்த் தேங்காய் அடித்தல் அவர்கள் 'பொல் கெலிய' என்றும், கொம்பு முறித்தலை 'அங்கெலிய' என்றும் மிகவும் பிரபல்யமாக வழங்குவர். குருநாகற் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ள ஏட்டுப்பிரதியின் மூலமும் சிங்களத்தில் எழுதப்பட்டுள்ள பத்தினித் தெய்வம் சம்பந்தமான இலக்கியங்களாலும் இதனை நன்கு அறிய முடிகிறது. கொம்பு விளையாட்டு நடைபெறும் சந்தர்ப்பங்களில் இரு கட்சியினராலும் படிக்கப்படும் பாடல்கள் மிகவும் ஓசை நயமும் பொருட்சுவையும் கொண்டவையாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக இரு பாடல்களை நோக்குவோம்.

*"வடசேரியான் கொம்பு எங்கேயெங்கே*
*மணமுள்ள தாழையின் மேலே மேலே*
*தென்சேரியான் கொம்பு எங்கேயெங்கே*
*செம்பர பற்றைக்குக் கீழே கீழே".*

*"வடசேரியான்கொம்பு எங்கே யெங்கே*
*வண்ணாண்ட சாடிக்குள்ளே உள்ளே*
*தென்சேரியான் கொம்பு எங்கேயெங்கே*
*சித்திரத் தேருக்கு மேலே மேலே"*

இவ்வாறு ஒரு கிராமத்தில் இரவு பகலாக நடைபெறும். சமயச் சார்புள்ள கொம்பு விளையாட்டு குளுத்தியும், வாழியும் பாடப்படுவதோடு நிறைவு பெறும்.

குளுத்தி ஆடுதல் அன்று படிக்கப்படும் குளுத்திப் பாடல்கள் மிகவும் சொற்சுவை பொருட்சுவையுடையன.

*"எச்சேரி வெந்தாலும்*
*இடைச்சேரி வேகாமல்*
*உன்முலை குளுந்தாற் போல்*
*நீயும் குளுந்தருள்வாய்"*

*குளு 78*

கண்ணகி வழிபாடு 'கடல் சூழ் இலங்கை கஜவாகு மன்னன் என்னும் சிங்கள அரசனுடைய காலத்திலிருந்து கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனோடு தொடர்பாகவே தமிழ் மக்களிடையே காணப்படும் இக்கொம்பு விளையாட்டும் சிங்கள மக்களுடைய சமய வழிபாட்டு கலைகளுடன் கலப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்க வேண்டும் எனக் கொள்ளுதல் வேண்டும்.

செ. எதிர்மன்னசிங்கம்
*உதவிப் பணிப்பாளர்.*
*கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு அமைச்சு,*
*வ. கி. மா.*
*திருகோணமலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய பிரதட்சணை தத்துவம்

திருக்கோயிலில் இராஜ கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் பிரகாரங்கள் உள்ளன. பொதுவாகக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பிரகாரமதிற் சுவர்கள் மறைத்துக் கொண்டுள்ளன. எல்லாத் திசைகளிலிருந்தும் இறைவனைக் காண முடிவதில்லை. பிரதான வாயில் என்று சொல்லப்படுகின்ற கிழக்கு வாயில் வழியாகவே சென்று கண்டு வழிபட முடிகின்றது. இறைவனை மறைத்துக் கொண்டிருக்கும் பிரகார மதிற் சுவர்கள் மனிதன் தன்னிடத்தில் உள்ள ஆன்மாவை தான் ஆன்மா என்ற உண்மையை எளிதில் அறிய முடியாத வகையில் அமைந்துள்ள உடம்பை உணர்த்துகின்றன. மதிற் சுவர்கள் இல்லையென்றால் இறைவனை எங்கிருந்தும் எப்பொழுதும் கண்டு வழிபடலாம். உடம்பு இல்லையென்றால் மனிதன் தான் "உடம்பல்ல, ஆன்மாதான்" என்ற உண்மையை எப்பொழுதும் சிந்தையில் கொண்டிருப்பான்! பிரகாரத்தின் மதிற்சுவர்களின் அமைப்பு, மறைப்பு ஆகியவை உடம்பின் மறைப்பு ஆகியவற்றை உணர்த்துகின்றன. பிரதான வாயில் என்று சொல்லப்படுகின்ற கிழக்கு வாயில் வழியாகவே இறைவனைக் காணமுடிகின்றது. இறைவழிப்பாட்டின் வாயிலாகவே "தான் ஆன்மா" என்பதை மனிதன் அறியமுடிகின்றது. பிரகாரத்து மதிற் சுவர்களின் மறைப்பு இறைவனுடைய ஐந்தொழில்கள் முறையில் மறைத்தல் என்னும் தொழில் முறையில் உள்ளது. இந்த மறைப்பால் உணர்த்தப்படுகின்ற உடம்பு ஆன்மாவை மறைப்பதால்தான் சான்றோர்கள் தமது உடல்பற்றி இறைவனிடம் முறையிட்டுள்ளனர்.

திருக்கோயில்களுள் ஐந்து பிரகாரங்கள் உள்ள கோயில்களும், மூன்று பிரகாரங்கள் உள்ள கோயில்களும், ஒரு பிரகாரம் உள்ள கோயில்களும் உண்டு.

திருக்கோயிலில் உள்ள ஐந்து பிரகாரங்கள் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்த மயம் என்னும் ஐந்து விதக் கோசங்களையும் குறிக்கின்றன. திருக்கோயிலில் உள்ள மூன்று பிரகாரங்கள் ஐந்து கோசங்களாவன தூலம், சூட்சமம், காரணம் என்னும் மூவகை உடம்புகளைக் குறிக்கின்றன.

கோயிலில் வழிபடுவோர் மூன்று அல்லது ஐந்து முறை பிரகாரங்களைச் சுற்ற வேண்டும் என்பது மூவகை உடம்புகளையும், ஐந்து விதக் கோசங்களையும் கடந்து இறைவன் விளங்குகின்றான் என்பதை நினைப்பதற்காகும். இந்த ஐந்து பிரகாரங்களையும் கடந்தால் இறைவனது சமீப்ய நிலையை அடையலாம் என்னும் உண்மையை உணர்தல் வேண்டும். திருக்கோயிலில் உள்ள ஒரே பிரகாரம் பொதுவான உடம்பைக் குறிப்பதாகும்.

பிரகாரத்தில் வலமாக வரும்போது கருவறையைச் சுற்றிலும் அர்த்த மண்டபம், மகாமண்டபம், அபிடேக மண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபம் ஆகியவை உள்ளன. கருவறை உடம்பில் உள்ள மூலாதாரத்தைக் குறிக்கும் பிற மண்டபங்கள் எல்லாம் சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுக்தி ஆக்ஞை என்பவற்றைக் குறிக்கும்.

## வலம் வருவதில் உள்ள உண்மை

திருக்கோயிலில் உள்ள பிரகாரங்களில் வலம்வருவதற்கென்று நியதிகளும் வலம்வருவதால் உண்டாகும் பலன்களும் உள்ளன.

காலையில் வலம் வருதல் – நோய் தீர்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலில் வலம் வருதல் –
விருப்பம் அளிக்கும் (இஷ்டசித்தி)
மாலையில் வலம் வருதல் –
எல்லாப்பாவத்தையும் அகற்றும்
அர்த்த சாமத்தில் வலம் வருதல் –
மோட்ச சித்தியும் உண்டாகும்
விநாயகருக்கு –
ஒருமுறை வலம் வருதலும்
சூரியனுக்கு –
இரண்டு முறை வலம் வருதலும்
சிவனுக்கு –
மூன்றுமுறை வலம் வருதலும்
அம்பாளுக்கு –
நான்கு முறைவலம் வருதலும்

இன்றியமையாதவை என்று கூறுவாரும் உளர். பிரகாரத்தில் வலம்வரும்போது பெண்கள் எண்ணெய்க் குடத்தை எடுத்துச் செல்வது போல் அடிமேல் அடி வைத்துப் பிறருடன் பேசாமல் செல்லுதல் வேண்டும்.

திருக்கோயிலில் உள்ளவிநாயகர், முருகன், அம்பாள் முதலிய திருச்சந்நிதிகளைத் தனியாக வலம் வருதல் கூடாது சேர்ந்தே பொதுவாக வலம் வருதல் வேண்டும். ஏனெனில் மூலமூர்த்தியின் சாநித்தியம் குறைவுபடும்.

கொடிமரத்திற்கு வெளியில் உள்ள இடங்களுக்கு இந்த நியதி இல்லை.

1. அடிதண்ட வலம்வருதல் – ஓர் அடிக்கு ஒரு முறை வணக்கம் செய்த வாறு வலம்வருதல்.

2. அங்கம் வலம் வருதல் – உடல் முழுவதும் நிலத்திற் படும் படி படுத்துக்கொண்டே உருண்டு வலம் வருதல்.

*(தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி கும்பாபிஷேக மலரில் இருந்து. அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.)*



கும்பாபிஷேக தினத்தன்று எண்ணெய்க் காப்பு வைபவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடும் நாமும்

*"அரிது அரிது மானுடராதல் அரிது"*
*"வானிடத்தவரும் மண்மேல் வந்தரன்தனை அர்ச்சிப்பர்"*
*"மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"*

என்றெல்லாம் மனிதப் பிறவியின் மேன்மையைப் போற்றுவர்.

இவ்வாறான பெறுதற்கு அரியதான மானிடப் பிறவியை, முன் செய்த புண்ணிய தவத்தினால் நாம் பெற்றுள்ளோம். இம் மானிடப் பிறப்பினால் வரும் பயன், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களிலும் நின்று இறைவனை வழிபட்டு நித்தியானந்த முத்தியை அடைதலே.

அவ்வகையில் நாம் எமது இறுதி இலட்சியமாகிய முத்தியைப் பெறுவதற்கு ஏற்ற ஒரு சிறந்த சாதனமாக விளங்குவன ஆலயங்களாகும். இவ் ஆலயங்களுக்குச் சென்று இறைவனை வழிபடுவதன் மூலம் நாம் இறையருளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இறைவனை நாம் ஏன் ஆலயங்களுக்குச் சென்று வழிபட வேண்டும்? ஆம் எங்கும் வியாபித்திருக்கும் இறைவனை ஆலயங்களில் கண்டு வணங்க வேண்டிய தேவை யாது?

பசுவின் உடம்பெல்லாம் பால் செறிந்து காணப்படினும், அதன் மடியின் மூலமாகவே பாலினைப் பெற்றுக் கொள்கின்றோம். நீரானது நிலத்தின் கீழ் எங்கும் பரந்து காணப்படுகின்றது. எனினும் நாம் கிணறு தோண்டி, கிணற்றிலிருந்தே நீரினைப் பெறுகின்றோம். அது போன்றதுதான், நாம் எங்கும் வியாபித்திருக்கும் இறைவனை ஆலயங்களிலே வழிபடுகின்ற முறைமையும்ஆகும். ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் பொருட்டுத் திருவுருவங்களில் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடமே ஆலயங்கள். எனின் இறைவன் இல்லாத இடங்களே கிடையாது. எனினும், ஆலய வழிபாடு இன்றியமையாததாகும்.

எம்மையெல்லாம் முத்தியாகிய கரையில், ஏற்றுங் காரணமாகவே மூர்த்தி, தலம் தீர்த்தம் என்னும் மூன்று வடிவாக இறைவன் விளங்குகின்றான். இவற்றை முறையாக வழிபடுவோர், உண்மை ஞானம் பெற்று முத்தியடைவர் இதனை,

*"மூர்த்தி தலந் தீர்த்த முறையாற்றொடங்கினர்க்கோர்*
*வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"*

எனவரும் தாயுமான சுவாமிகள் அருள்வாக்கினால் உணரலாம்.

மேலும் இறைவனை வழிபடுவதற்கு மிக மிக முக்கியமானவை மன ஒருமைப்பாடும் அமைதியான சூழலுமாகும். இவற்றைத் தரக் கூடியவை ஆலயங்களே. ஆன்மாக்கள் இறைவனுடைய திருவடியில் ஒடுங்குதற்கரிய இடங்கள் இவ் ஆலயங்களே ஆகும்.

ஐம்புலன்களையும் அடக்கி இறைவனை உள்ளத்திலே தியானித்து, அமைதியான சூழலிலே வழிபட உகந்த இடங்களாக ஆலயங்கள் விளங்குகின்றன. சுருக்கமாகக் கூறின் ஆன்மாக்கள் லயப்படும் இடங்கள் ஆலயங்கள் எனலாம்.

எனவே எம்மையெல்லாம் இறைவனோடு சேர்ப்பிக்கின்ற இடங்களாக விளங்கும் ஆலயங்களுக்குச் சென்று இறையைத் துதிப்பது எம் ஒவ்வொருவரதும் கடமையாகும். அது பெரும் சிறப்பையும் கொடுக்கும்.

இதனாற்றான் போலும்

*"ஆலயந் தொழுவது சாலவும் நன்று"* என்றனர்

அது மட்டுமல்லாது,

*"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா*
*நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்கு"*

*"திருக்கோயிலில்லாத திருவிலூரும்............*
*ஊரல்ல அடவி காடே"*

*ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்*
*செத்துப் பிறப்பதற்கே தொழிலாகியிறக்கின்றாரே"*

என்ற அடிகளெல்லாம் ஆலய வழிபாட்டின் இன்றியமையாமையையே எடுத்துக் காட்டி நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்திகள் நீ தருவாய் சித்திவிநாயகா

திருமலை மாவட்ட மண்ணில்
திருபொலியும் எங்களூராம்
மேன்மையுறு சிந்து மக்கள்
போற்றுமிந்த பள்ளிக் குடியிருப்பாம்

பள்ளிக் குடியிருப்பில்
பவனி வந்தால் போதுமடா
துள்ளி விளையாடுமே
மாந்தர் மனங்களெல்லாம்

சிந்து நாடு தந்த
சீரான வேளாளர்
முந்தி உயர் வாழ்வை
கண்ட பெரு மக்கள்

சோலைகளால் தாலாட்டி
கனிகளால் சீராட்ட
வேலைத் திரை ஒலியில்
வாழும் இப் பதியில்

வினையறுக்கும் நாயகனாய்
குடி கொண்ட கணபதியே
விரைந்து அருள் தாருமையா
வாழ்வி லிருள் ஓடிடவே,

முருகனுக்கு மூத்தவனே
மூஞ்சூறு வாகனனே
அருள் கரந்து தாருமையா
அடி பணிந்து இறைஞ்சுகின்றோம்.

மேன்மக்கள் வாழ் பதியில்
சீர்கொண்டு உறைந்தவனே
மேலான வாழ்வு தர
வேண்டுகின்றோம் உன்னருளை

பள்ளிக் குடியிருப்பில்
பள்ளி கொண்ட எம்மிறைவா
அள்ளி யருள் நீ தரவே
அடிபணிந்து நாம் வந்தோம்

குடமுழுக்கு நாம் கண்டால்
குவலயத்தில் ஏது குறை
திடமோடு நாம் வாழ
திருட வந்தோம் உன்னருளை

தோப்புக் கரண மிட்டு
தொப்பை அப்பனுனை
தொழுத மாந்தருக்கு
தொடரா வேதனைகள்

மோதகப் பிரியனுனை
மோப்பம் கண்டு வந்தால்
சாதகப் பலன்க ளெல்லாம்
சாற்றுவாய் எங்களுக்கு

சித்தி தரும் நாயகனே
சித்தமெல்லாம் நீ உறைந்து
இத்தரையில் பக்தி மழை
இத்தினமே பொழியட்டும்.

*ஆக்கம் – ப. மதிபாலசிங்கம்*
*அதிபர்,*
*தி/ஸ்ரீ சண்பக மகா வித்தியாலயம், ஈச்சிலம்பற்று.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர்ப் பிரதேசத்தில் நிலவும் சிறுதெய்வ வழிபாடும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையும்

ஈழத்தில் திருகோணமலை மாவட்டத்தின் தெற்கே, கொட்டியாரக்குடாவை வடக்கு எல்லையாகக் கொண்டு அமைந்துள்ளது மூதூர். வடக்குத் தெற்காக சூடைக்குடா தொடக்கம் – வெருங்கல்வரையும், கிழக்கு மேற்கு எல்லைகளாக இந்து மகாசமுத்திரக் கடலையும், இறால் குழியையும் கொண்ட ஒரு நீண்டு பரந்த பிரதேசமாகவே, மூதூர் காணப்படுகின்றது. இங்கு இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் என்றும் மதப் பிரிவினர் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இங்கு வாழும் இந்துக்களைப் பொறுத்த வரை அன்றாட வாழ்வில் சமயம் பின்னிப் பிணைந்ததாக வழிபாடுகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள், இன்ப, துன்ப நிகழ்வுகள் என்பன இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

வழிபாட்டு ரீதியாக நோக்கும்போது இப் பிரதேசத்தில் ஆகமம் சார்ந்த, ஆகமம் சாராத வகையில் ஆலயங்களாக அமைந்துள்ளவை சுமார் (45) நாற்பத்தைந்து உண்டு. இவற்றுள் பழமையானதும், புரான வரலாற்றுப் பெருமை வாய்ந்ததுமான ஆலயங்களும், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் என்பவற்றையும், நூல்கள் வாயிலான ஆதாரங்களைக் கொண்டதுமான ஆலயங்களும் இதனுள் அடங்கும். தற்போதய சூழ்நிலைகள், இப்பிரதேச இந்து மத வழிபாட்டுத் தலங்கள் அனைத்துமே அதன் எழில்கோலம் குன்றியதாயும், ஒழுங்கான பராபரிப்பில்லாமலும், இடிந்த நிலையிலுமே பெரிதும் காணப்படுகின்றது.

பழம் பெருமை மிக்க ஆலயங்கள் வரிசையில் பின்வரும் ஆலயங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

1. வெருகல் சித்திர வேலாயுத சுவாமி ஆலயம்
2. கங்குவேலி சிவன் ஆலயம்
3. வவுனாவில் திருக்கரைசையம்பதி
4. சம்பூர் ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலயம்
5. சேனையூர் ஸ்ரீ வர்ண குல விநாயகர் ஆலயம்
6. பட பத்திரகாளியம்பாள்
7. ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்

பள்ளிக்குடியிருப்பு போன்றன ஆகம முறைசார் வழிபாடாகவும், பாரம்பரிய ஆலயங்களாகவும் திகழ்கின்றன.

முறைசார் வழிபாட்டுத் தலங்களை விட அதிகளவிலான சிறு தெய்வ வழிபாடுகள் முறைசாரா வழிபாடுகளாக இப்பிரதேசத்தில் இடம்பெறுகின்ற போதிலும் இவை – வெளியுலகிற்கு வருவது மிகவும் குறைவாகவேயுள்ளது. இத்தகைய வழிபாடுகள் இங்கு பழைமையாகவும், பாரம்பரியம் மிக்கதாகவும், இப்பிரதேச மக்கள் மத்தியில் பெரிதும் செல்வாக்கு மிக்கதாகவும், காணப் படுகின்றது. இவ்வழிபாடு மட்டும் எத்தகைய சூழ்நிலையிலும் கூட அதன் தன்மையிலோ, வழிபாட்டம்சங்களிலோ சிறிதேனும் மாறுபாடின்றி உயிரோட்டமுள்ளதாகவே காணப்படுகின்றது.

இவ்வழிபாட்டின்போது பெரிய கட்டிடங்களோ, உயர்ந்த கோபுரங்களோ இல்லை, சிறிய படிகளும், வயிரமர நிழல்களும், பெரிய கற்களும், அவற்றின் குறியீடுகளாகக் காணப்படுகின்றன. தற்போது சிற்சில இடங்களில் சிறிய ஆலயங்களாக உருவாக்கப்பட்டும் உள்ளது.

ஈழத்தில் வடக்கு, வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் மலை நாடுகளில் காணப்படும் சிறு தெய்வ வழிபாடுகளோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திருப்பினும் அவற்றின் முறைகள், தன்மை என்பவற்றில் வேறுபாடுகளும் காணக் கூடியதாகவே உள்ளது. இப்பிரதேசத்தில் காணப்படும் சிறு தெய்வ வழிபாடுகளை இரு பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன ஒன்று பத்ததி முறையானது மற்றையது, பத்தி முறையானது. இவ்விரு முறையினை விடவும் இன்னும் சிறு சிறு வழிபாட்டு முறைகளும் உண்டு. இவற்றுள் பத்ததி முறையிலான வழிபாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. வீர பத்திரர் வேள்வி
2. அம்மச்சி அம்மன் வேள்வி
3. பத்தினியம்மன் வேள்வி
4. வெள்ளைக்கல் மொந்தன் வேள்வி
5. கப்பல் சடங்கு
6. நாகமாள் வேள்வி
7. நாயமார் வேள்வி
8. கொம்பு விளையாட்டு
9. காத்தவராயர் சடங்கு
10. ஐயனார் வேள்வி
11. வட பத்திரகாளி அம்மன் சடங்கு
12. செம்மனாச்சியம்மன் வேள்வி
13. நீலியம்மன் சடங்கு
14. வீரமாகாளியம்மன் சடங்கு
15. நவராத்திரியம்மன் கும்பம்
16. நரசிங்க வழிபாடு

போன்றவை குறிப்பிடத்தக்கவை. மேற்கூறிய வழிபாடுகள் பத்ததி முறையினைத் தழுவியதாக, அதற்கு ஏற்ற வகையில் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்து நீண்ட காலமாக ஒவ்வொரு பரம்பரையினரால் பேணப்பட்டு வருவதாகும். கால மாற்றங்கள், சமூகப் பிரச்சனைகள் எதுவுமே இவ்வழிபாட்டு முறைகளையோ, அதன் உணர்வு பூர்வமான செயற்பாடுகளையோ மாற்றம் செய்ய முடியாதவாறு எழுதப்படாத மரபு ஒன்று என்றும் இப்பகுதி மக்களால் பாதுகாத்து வருகின்றது.

இவ் வழிபாடுகள் மூதூர் பிரதேசத்தில் உள்ள சிறப்பு மிகு வழிபாடுகளாகும். இங்கெல்லாம் பெரிய கோபுரங்களோ, அன்றி கட்டிடங்களோ, இல்லாத விடத்திலும் பழம் பெருமையும், பக்திச் சிறப்பும் கொண்டதாக குறிப்பிட்ட காலங்களில் இடம்பெறும் வழிபாடுகளாகவும் இருக்கின்றது. அத்தோடு ஒரு குறிப்பிட்ட நோக்கை உடையதாகவும் ஆண், பெண் தெய்வ வழிபாட்டினைக் கொண்டதாகவும் அமைகின்றது. அதிகமான அம்மன் வேள்விகள் வைகாசி மாதங்களில் இடம் பெறுகின்றன. இக் காலத்தில் அதிக வெப்பம் இருப்பதனால் மக்களுக்கு அம்மை நோய்கள் ஏற்படுவது வழக்கம். இதனை ஆற்றுப்படுத்தும் பொருட்டு வேண்டப்படும் வழிபாடுகளாகவே பெரிதும் காணப்படுகின்றது. இதன்போது பரிகலம் அடைத்தல், கன்னிக்கால் நடுதல், பந்தல் அமைதல், மடைப்பெட்டி எடுத்தல், பொங்கல் வைத்தல், உரு ஆடுதல், சாட்டை அடித்தல், பறைமேளம் அடித்தல், கட்டுச் சொல்லுதல், குளுர்த்தி பாடுதல் போன்ற விடயங்கள் இடம்பெறுகின்றன. இச் சடங்குகளின் போதெல்லாம் இக்கிராமத்தில் உள்ள பூசாரி என்று அழைக்கப்படும் ஒருவரே இப் பூசைகள் அனைத்தையும் செய்வார். உதவியாளர்கள் பலரும் உதவியாக இருப்பார்கள். எல்லோருக்கும் மந்திரம் ஓதத் தெரிந்திருக்கும். பார்வையாளர்களும் கூட பூசை வேளைகளின் போது உருவாடுவார்கள் இதனை பரிகல வேள்வி என அழைப்பர்.

இத்தகைய வேள்விகள் ஒவ்வொரு ஆலயத்திலும் குறிப்பிட்ட தினத்தில் அக் கிராம மக்கள் சூழ மிக விமரிசையாக நடைபெறும்.

மற்றும் தொழிலை நோக்காகக் கொண்டு செய்யப்படும் வேள்விகளும் உண்டு. அதிகமாக இக்கிராமங்களில் வேளாண்மைச் செய்கையே இடம் பெறுகின்றது. எருமை மாடுகள் வளர்த்தல், பசு மாடு வளர்த்தல் என்பனவும் உண்டு. இவர்களால் தங்கள் பொருட்களை வளமாக்குவதற்கும் பாதுகாப்பதற்கும் இறைவனை வேண்டிச் செய்வதாகவே இவ்வேள்விகள் இடம் பெறுகின்றன. நாயன்மார் வேள்வி, ஐயனார் வேள்வி, நரசிம்ம வழிபாடு, வைரவ வழிபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவை குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் காவல் தெய்வங்களாகவே இவை கருதப்படுகின்றன. கப்பல் சடங்கு நீலியம்மன் வேள்வி போன்றவை கரையோர மக்கள் மத்தியில் இடம் பெறுகின்றது.

இப்பிரதேசத்தில் கும்பத்து அம்மன் வழிபாடு என அழைக்கப்படும். நவராத்திரி கால சக்தி வழிபாடு மகிடாசூர சங்காரி யாக தனித்துவமான முறையில் மூதூர் பிரதேசத்தில் கிழக்குப் புற கிராமங்களான சேனையூர், கட்டை பறிச்சான், கடற்கரைச்சேனை, அம்மன் நகர், சாலையூர், மருதநகர் கிறவல் குழி போன்ற இடங்களில் நீண்ட காலமாக இடம் பெற்று வருகின்றது. இவ்வழிபாட்டின் போது உருவாட்டம், மந்திரங்களின் உபயோகம் என்பன ஒன்பது நாட்களும் இடம் பெற்று பத்தாம் நாள் கன்னி வாழை வெட்டி கும்ப ஊர்வலம் இடம்பெறும். இது பார்ப்போரை மெய்சிலிர்க்க வைக்கும் நிகழ்ச்சியாகும். இவ் வழிபாடுகள் இப்பகுதி மக்களின் வாழ்வில் பிரிக்க முடியாதவைகளாக இடம்பெற்று வருகின்றன. ஆனால் அனைத்துமே பத்ததி முறையினைத் தழுவியதாகும்.

பத்தி முறையிலான வழிபாடு எனும் போது வீடுகளிலோ அல்லது விவசாய, தொழில் செய்யும் இடங்களிலோ காவல் தெய்வங்களாக வழிபடப் படுபவையாகும். பெரும்பாலும் அவ்வூர் பூசாரியார் இல்லாதவிடத்தும் தாங்களே இப் பூசைகளைச் செய்து கொள்கின்றனர். இது தங்கள் குலதெய்வ வழிபாடாகவும் கருதப்படுகின்றது. இத்தகைய வழிபாட்டில் இடம்பெறும் தெய்வங்களாக –

1. வீரபத்திரர்
2. வன்னித் தெய்வம்
3. போத்தராயர்
4. வீரவாகு
5. காவலாளி
6. மதுரை வீரன்
7. வைரபர்
8. வராகியம்மன்
9. கொத்தியம்மன்
10. பேச்சியம்மன் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வழியாடுகள் தமக்கு ஏற்பட்ட நோய்களை சுகப்படுத்தும் நோக்கிலும் குடும்பத்தைப் பாதுகாக்கும் நோக்கிலும் குறிப்பிட்ட காலங்களில் தங்கள் வசதிக்கு ஏற்றவாறு செய்து கொள்வர்.

இன்னும் ஒருவகையான வழிபாட்டு முறையும் உண்டு. ஒரு குறிப்பிட்ட சிலரால் ஒரு சில நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மேற் கொள்ளப்படுகிறது. இதனை பேய், பிசாசு வழிபாடு என்றும் சொல்வர். அவற்றுள் சில –

1. காடேறி
2. பிறத்தியிங்கிலி
3. சுடலைக்காளி
4. சுடலை வைரவர்
5. பிடாரி
6. மாடன்

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வழிபாட்டில் கழிப்புக் கழித்தல், நூல் கட்டுதல், தண்ணீர் ஓதல், பேய் விலக்கல், குளையடித்தல், திருநீறு போடுதல், அச்சிரம் கட்டுதல் என்பன இடம் பெறும்.

இவ்வாறு மூதூர்ப் பிரதேசத்தில் உள்ள இந்துக் கிராமங்களாகிய ஈச்சலம் பற்று, பூனகர், பாட்டாளிபுரம், நல்லூர், இலக்கந்தை, வீரமாநகர், சம்பூர், கூனித்தீவு, கடற்கரைச் சேனை, சேனையூர், கட்டை பறிச்சான், பள்ளிக் குடியிருப்பு, கங்குவேலி, மல்லிகைத்தீவு பட்டித்திடல், மேன்காமம், கிளிவெட்டி, பாலத்தடிச்சேனை போன்ற கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளில் இத்தகைய சிறு தெய்வவழிபாடுகள் நீண்ட காலமாக இங்கு வாழும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளதோடு, காவியம், அகவல், தோத்திரம் போன்ற இசைப் பாடல்களும் பறை, உடுக்கு, அம்மானைக்காய், சிலம்பு போன்ற இசைக் கருவிகளும் பயன்படுத்தப் படுகின்றன.

இப் பூசை வழிபாட்டுக் காலங்களில் கிராமத்தவர்கள் மத்தியில் ஒருவித மகிழ்ச்சியும் ஒற்றுமையும் இடம் பெறுவதோடு வழிபாட்டில் மானசீகமான ஒரு உறுதியும் இடம் பெறுவதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். பெரும்பாலும் இவ்வழிபாடுகளின் போது உரு ஆடுபவர்கள் கட்டுச் சொல்கின்ற வழக்கம் இருப்பதால் அங்கு செல்பவர்கள் பய பக்தியோடும் நம்பிக்கையோடும் காணப்படுகின்றனர். சில தெய்வங்களுக்கு ஆடு, கோழி என்பன பலியிடுதல் கடந்த காலங்களில் இருந்த போதும் தற்காலத்தில் அது குறைந்து செல்கின்றது.

எனவே மூதூர் பிரதேசத்தில் நிலவும் வழிபாட்டு முறைகளுள் முறைசார், முறைசாரா வழிபாடு போன்ற பல்வேறுபட்ட முறைகளோடு பத்ததிமுறை, பக்தி முறை, பேய் பிசாசு வழிபாட்டு அம்சங்கள் நிலவுகின்ற போதிலும் பரந்தளவிலான வகையில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நுணுக்கமாக நோக்குமிடத்து பல தகவல்களைத் தெரிவிக்க முடியும். இப்பகுதி மக்கள் பாரம்பரியமாகவோ கலை கலாசாரங்களோடு தொடர்புடையதாகவும் விழாக்களாகவும், வேள்விகளாகவும், விரதங்களாகவும், நேர்த்திகளாகவும், சடங்குகளாகவும், மடைகளாகவும், பூசைகளாகவும் பொங்கலாகவும், தங்களுடைய நோக்கங்களைக் கருத்தில் கொண்டு வசதிக்கு ஏற்றவகையில் மிகவும் நம்பிக்கையோடும் இப்பாரம்பரிய வழிபாடுகளைக் காலம் காலமாகப் பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

*ஆக்கம் –*
இ. இரத்தினசிங்கம்
*T. T. B. A.*
*ஆசிரியர்*
*தி/கலைமகள் இந்துக்கல்லூரி*
பள்ளிக்குடியிருப்பு

## செல்வம் வந்தால் மனிதரின் இயல்பு

இந்த உலகத்தில் வாழும் மக்கள் தமக்குமிக்க செல்லம் வந்து சேர்ந்து விட்டால் தெய்வத்தைச் சிறிதும் எண்ணிப் பார்க்க மாட்டார்; தாம் சொல்வதை இன்னது என அறிந்து சொல்ல மாட்டார்; தம் உறவினரையும் நண்பரையும் பொருட்படுத்த மாட்டார். எப்போதும் அவர்கள் வெற்றிச் செயலையே எண்ணுவது அல்லால் கொடிய பகைவர் வல்லவர் என்று எண்ணிப் பார்க்க மாட்டார். வலிய பாவத்தின் விளைவையும் நினைத்துப் பார்க்க மாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திு/ பள்ளிக்குடியிருப்பின்

# கொம்பு விளையாட்டு

கிராமிய வழிபாடுகள் பல உள்ளன. இவ் வழிபாடுகள் பல்வேறுபட்ட தன்மைகளில் விதங்களில் நடைபெறுகின்றன. பொங்கல், மடை, குளிர்த்தி, வேள்வி, கும்பம் எனப் பல்வேறுபட்ட வகைகளில் வழிபாடுகள் இடம் பெறுகின்றன. இவ்விளையாட்டு விளையாட்டின் மூலம் இறைவழிபாடு செய்வதற்காகவே செய்யப் படுகின்றது.

இக் கொம்பு விளையாட்டானது எமது பள்ளிக்குடியிருப்பு பகுதியில் வாழும் சிந்து நாட்டு வேளாளர் விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களின் பெரும்போகச் செய்கையின் போது கிடைத்த இலாபங்களுக்காக இறைவனை நினைந்து இறைவனை விளையாட்டுக்கள் மூலம் வழிபடுவார்கள். இக்கொம்பு விளையாட்டு ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை நிகழ்கின்றது. 1976ம் ஆண்டு இறுதியாக கொம்பு விளையாட்டு நடைபெற்றது. வடகிழக்குப் பிரச்சினை காரணமாகத் தொடர்ந்து இவ் விளையாட்டு நடைபெறா திருக்கின்றது. எமது பள்ளிக்குடியிருப்பு பகுதியிலே உள்ள மக்கள் பதினொரு குடிகளாக உள்ளனர். இந்தக் குடிகளுள் மூன்று (8, 9, 10) திருவிழா குடிகள் வடசேரியாகவும் ஏனைய குடிகள் தென்சேரியாகவும் இரு பகுதியாகப் பிரிந்து விளையாட்டிலே ஈடுபடுவார்கள்.

இவ்வழிபாட்டிலே வடசேரியாரது தெய்வமாகச் சிவபெருமானும் தென்சேரியாரது தெய்வமாக உமாதேவியாரும் அருள் புரிகின்றனர். எமது பகுதியிலே உள்ள இவ்விளையாட்டு மட்டக்களப்புப் பகுதியிலும் செய்யப்பட்டு வரப்படுகின்றது. மட்டக்களப்புப் பகுதியிலே கோவலன் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புபட்டு இவ்விளையாட்டு இடம் பெறுவதாகக் கூறப் படுகின்றது. இவ்விளையாட்டு எட்டு நாட்கள் விளையாடப்படுகிறது.

கொம்பு விளையாட்டு தேங்காய் நேர்ந்து வைத்தலுடன் ஆரம்பமாகும். கிராமிய வழிபாட்டிலே பரிகலம் அடைத்தல் நடைபெறுவதைப் போன்று கொம்பு விளையாட்டு வழிபாடு எதுவித குறைகளும் இன்றித் தடைகளின்றி இனிது நிறைவேற பரிகலத் தெய்வங்களை வேண்டியே தேங்காய் நேர்தல் இடம் பெறுகின்றது. கொம்பு விளையாடுவதற்கு என்று ஒரு பொதுவான பகுதி இங்கு உள்ளது. இந்தப் பகுதியிலே இரண்டு தென்னோலையிலான குடிசைகள் கட்டுவார்கள். இவை கிழக்கு நோக்கியவாறு அமையப்பெறும். பெரிய குடிசையிலே சுவாமி வைத்திருப்பார்கள். மற்றைய குடிசையிலே கொம்புத் தலைவர்கள், வடசேரி, தென்சேரி விரதகாரர்கள், பாட்டு வாளியார், மேளகாரர்கள் போன்றோர் எட்டு நாட்களும் தங்கியிருப்பார்கள். சுாவமி வைக்கப்பட்டிருக்கும் குடிசைக்கு முன்பாக கொம்புகள் இரண்டும் வைப்பதற்கு சேலையினால் கொம்பு மால்கள் அமைக்கப்பட்டு அதனுள் கொம்புகள் வைக்கப்படும். அவற்றுக்குப் பூசையும் நிகழும்.

கொம்பு விளையாட்டிலே பயன் படுத்தப்படும் கொம்பு முதிரை, கருங்காலி, பாலை போன்ற மரங்களிலே தானாக வளைந்து கொழுக்கி போல அமைந்த பகுதியே கொம்பாக வெட்டி எடுத்துப் பயன்படுத்தப்படும் கொம்பு விளையாட்டுத் திடலிலே வைரம் பொருந்திய பெரிய முதிரை மரத்திலான தூண் நடப்பட்டு இருக்கின்றது. விரதகாரர்கள் தங்கும் குடிசைக்கு முன்பாக காவல் கட்டைகள் போட்டு எரிக்கும் நிகழ்வு இடம்பெறுவது வழக்கம். இந்தக் காவல் கட்டைகளை பொதுமக்கள் நேர்கடனாகக் கொண்டு சென்று கொடுப்பார்கள். இந்தக் காவல் கட்டைகளைக் கொண்டு சென்று கொடுக்கும் போது தங்களுடைய நோய், பிணிகள் தீர்ந்து விடுவதாக மக்களிடையே நம்பிக்கை உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பு விளையாட்டுத் தலைவர்கள் தெரிவின் போது பாடும் திறமையுடைய வர்களாகவும், துணிவுடையவர்களாகவும் இருப்பவர்களையே தலைவர்களாகத் தெரிவு செய்வார்கள்.

கொம்பு விளையாட்டிலே மற்றொரு அம்சம் யாதெனில் வடசேரி, தென்சேரி ஆகிய இரு பகுதியினருக்குமாக இரண்டு பல்லக்குப் போன்ற தேர்கள் அழகான வர்ண வேலைப்பாடுகளுடன் கட்டுவார்கள் அவ்வாறு கட்டப்பட்ட தேர்களிலே இரவு ஏழு மணியளவில் சுவாமி வீதி வலமாக எழுந்தருளி ஒவ்வொரு வீதிகள் தோறும் ஊர்வலமாகச் செல்லும்போது மக்கள் தத்தம் வீடுகளின் முன்பாக பூரண நிறைகுடம் பூமாலைகள் வைத்து வழிபடுவார்கள். இவ்வாறாக வடசேரி தென்சேரி தேர்கள் இரண்டும் வீதியுலா சென்று முடிவடைந்ததும் கொம்புச் சந்தி என்று கூறப்படும் திடலுக்கு தேர்கள் வந்து சேரும். கொம்பு விளையாட்டுத் தொடங்கி நான்காம் நாள் இரண்டு சுவாமிகளும் நீலாப்பளை எனும் இடத்தில் உள்ள தாயம்மன் கோவிலுக்குச் செல்லும் வழக்கம் உள்ளது. இவ்வாறு செல்லும் போது சிவனுக்காக அவரது தேரிலே பிள்ளையாரையும் சக்தியை மற்றைய தேரிலேயும் வைத்து கொண்டு செல்வார்கள். அவ்வாறு செல்லும்போது சக்தியினுடைய தேர் மிக வேகமாகச் செல்வதை அவதானிக்கலாம். பிள்ளையாரது தேர் மிகவும் சாதாரண நடையிலுமே செல்லும். இத்தேர்களை அடியார்களே சுமந்து செல்வார்கள். அவ்வாறு நீலாப்பளையிலுள்ள அம்மன் கோவிலுக்குச் செல்லும் போது பட்டித்திடல், மணற்சேனை, மல்லிகைத் தீவு ஆகிய கிராமங்களூடாகவே செல்லும் அப்பகுதி மக்களும் நிறைகுடங்கள் வைத்து வழிபடுவதோடு நேர்த்திப் பொருட்கள் அன்பளிப்புகளை வழங்குவார்கள். பின்னர் தாயம்மன் கோவிலுக்கு சென்று மீண்டும் திரும்பும் போது கங்குவேலி, மேன்கமம், பாரதிபுரம் முன்னம்போடி வெட்டை, பாலத்தடிச் சேனை, ஆகிய கிராமங்களினூடாக தேர்கள் வரும். அவ் வேளையிலே அப்பகுதி மக்களும், வழிபடுவதோடு நேர்கடன்கள் நன்கொடைகள் என்பவற்றை வழங்குவார்கள்.

இதே போன்று தேர்கள் ஆறாம்நாளிலே சேனையூரில் இருக்கும் விநாயகர் ஆலயத்தை நோக்கிச் செல்லும். அவ்வாறு செல்லும் போது விநாயகருடைய தேர் மிக வேகமாகவும் அம்மனுடைய தேர் சாதாரணமாகவும் செல்லும். இவ்வாறு செல்லுவதற்கு தூக்கிச் செல்பவர்களின் பலம் காரணமல்ல இறைவனருளே காரணம் எனப் பெரியோர்களது அடியார்களது நம்பிக்கையாக உள்ளது. சேனையூர் விநாயகர் ஆலயத்துக்குச் சென்ற தேர்கள் இரண்டும் சேனையூர், கட்டை பறிச்சான் கிராமங்களில் வீதியுலா வந்து அருள்பாலிக்கும் வைபவம் இடம்பெறும். அம்மக்களும் நன்கொடைகள், அன்பளிப்புக்களை வழங்குவார்கள். இக் கொம்பு விளையாட்டு வேளையில் இப்பகுதி மக்கள் வருகை தந்து பார்த்துச் செல்வார்கள். கட்டை பறிச்சான் பூசாரி மார்க்கண்டு என்பவரும் மல்லிகைத் தீவு நல்லையா என்பவரும் மிகப் பழைய காலத்திலே இக் கொம் விளையாட்டு வேளையிலே கொம்புத் தலைவர்களுடன் இணைந்து செயற் பட்டவர்களாகவர்.

ஒவ்வொரு நாளும் தேர்கள் வீதியுலா வந்து முடிவுற்றதும் சகலரும் உறங்குவார்கள். பின் விடியற் காலையில் எழுந்து கொம்பு விளையாடுவதற்கு தயாராகுவார்கள். முதலாவது நாள் வடசேரியாருடைய பெரிய கொம்பும் தென்சேரியாரது முறிபடக் கூடியதான சிறிய கொம்பையும்விளையாடுவதற்குப் பொருத்துவார்கள். கொம்பு பொருந்தும் போது, ''வெல், வெல், வெல் வெல் வெல்'' என்று பல முறை கூறிக் கொம்பைப் பூட்டுவார்கள். அவ்வாறு பூட்டி இழுக்கும்போது சிறிய கொம்பு முறிந்து விடும். அதன்பின் பெரிய கொம்பு பகுதியினர் வாழ்த்துப் பாடல்களைப் பாடி ஊர்வலமாகச் செல்லும் வழக்கம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடசேரி பகுதியினர் கொம்பு வாழ்த்தி வந்தால் தென்சேரி பகுதியினர் வீதிகளில் நடமாடமாட்டார்கள். அதேவேளை தென்சேரியினர் அவர்களது வீதிகளில் வீடுகளுக்கு முன்பாக தண்ணீரைப் பாத்திரங்களில் அதிகமாக நிரப்பி வைத்திருப்பார்கள். வடசேரியினர் பாடிக் கொண்டு வரும்போது தண்ணீரை அவர்கள் மீது வீசுவார்கள். எவ்வளவுதான் நீர் அடித்தாலும் அதனைப் பொருட்படுத்தாது ஆடியவாறு வாழ்த்துப் பாடல்களைப் பாடிக் கொண்டு இருப்பார்கள் இந்த விதமாக மாறி மாறி ஒவ்வொரு நாளும் நடந்து கொண்டே இருக்கும்.

எட்டாம் நாள் இறுதியன்று இரண்டு பெரிய கொம்புகளும் பூட்டப்பட்டு இழுப்பார்கள். அவ்வேளையில் வடசேரியாரது கொம்புப் பகுதி வெற்றியடையும். தென்சேரியில் எவ்வளவு ஆட்கள் நின்று வடம் (கயிறு) பிடித்தாலும் வடசேரிப் பகுதிக்கே வெற்றி கிட்டும். கொம்பு குறிப்பிட்ட தூரம் இழுத்துச் சென்றதன் பின் சக்திக்கும் வெற்றி கொடுக்க வேண்டும் எனும் நோக்கோடு வடசேரிப் பகுதியினர் விட்டுக் கொடுப்பார்கள். அவ்வேளையில் தென்சேரிப் பகுதியினர் வெற்றி அடைவார்கள். வெற்றிக் களிப்பில் தென் சேரியினர் திளைப்பார்கள். இறுதியாக வடசேரியாரது பெரிய கொம்பும் தென்சேரியாரது சிறிய கொம்பும் பூட்டப்பட்டு வெற்றி பெற்றவர்கள் கொம்பு வாழ்த்துப் பாடல்களைப் பாடிக் கொண்டு வீதிவலம் வருவார்கள். அதோடு கொம்பு விளையாட்டு நிறைவுபெறும்.

இக் கொம்பு விளையாட்டு இறுதி நாள் நிகழ்வைக் கண்டு களிப்பதற்கு மூதூர் பகுதியிலுள்ள எல்லா கிராமங்களைச் சேர்ந்த மக்களும் வெளி இடங்களிலுள்ள மக்களும் பெருந்திரளாக திரண்டு வந்து பார்த்து இன்புறுவார்கள்.

கொம்பு விளையாட்டின் போது தோற்றவர்களைப் பற்றி வாழ்த்துதல், வைதல் எனும் அடிப்படையில் பாடல்களைப் பாடுவார்கள். வடசேரியார் பாடும்போது,

ஓ ஓ கோ... கோ....
தென்னானே....
மன்றும் மனையும் தளைக்க தளைக்க....
மக்களும் சுற்றமாய் வாழவும் வேண்டும்
என்றும் சுகமாய் இருக்கவும் வேண்டும்
எப்போதும் எம் கொம்பு வெல்லே வெல்லே
நாளைக்கும் எம் கொம்பு வெல்லே வெல்லே
நாளையண்டைக்கும் எம் கொம்பு வெல்லே வெல்லே
(ஓ கோ கோ)

வடசேரியார் கொம்பு எங்கே எங்கே
மணமுள்ள தாளை மரத்தினுள்ளே..... உள்ளே
தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
தென்கோடி மூலைக்குள்ளே... உள்ளே
(ஓ கோ கோ)

பின்னர் தென்சேரியாரும் பாடும் போது இதே வாழ்த்துப் பாடல்களைப் பாடி இன்னும் எவ்வளவு கேலியாகவும் ஏளனமாகவும் நையாண்டியாகவும் பாடமுடியுமோ அவற்றையெல்லாம் பாடி வீதிவலமாகச் சென்று முடிப்பார்கள். இவ்வாறு வசை பாடி முடிந்து இறுதி இரவு இரு பகுதியினரும் ஒன்று சேர்ந்து சேரி பாடி இவ்விளையாட்டு விழா முடிவு பெறும்.

*ஆக்கம் –*
திரு. வி. பாக்கியராசா
*(பிரதி அதிபர்)*
*தி/ஸ்ரீ சண்பக மகா*
*வித்தியாலயம்*
*ஈச்சிலம் பற்று.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிர்கள் மீது அன்பு கொள்



பசுவைத் தெய்வமாக வழிபடுகிறோம். அதற்குப் பொங்கல் செய்கிறோம். பொட்டிட்டு மாலை போடுகிறோம். அதன் சாணியை விபூதியாக்கி அணிந்து கொள்கிறோம். எருத்து மாடுகளை வயல் உழவும் வண்டி இழுக்கவும் உபயோகப்படுத்துகிறோம்.

தாய்ப்பால் இல்லாத குழந்தைகளை பசுத்தாய் தானே பால் கொடுத்து வளர்க்கிறது. நோயாளிகளையும் முதியோர்களையும் கூடப் பால் கொடுத்துக் காப்பாற்றுகின்றது. வெளிநாடுகளில் இருந்து இலட்சக் கணக்காக வந்து சேரும் பால்மாப் பெட்டிகளும் பசுக்களின் கொடைகளே.

பசு சாதுவான மிருகம் என்று எல்லோரும் சொல்லுவார்கள். கொம்பிருந்தாலும் அது மனிதரை இடிப்பதில்லை. மனிதன் கொம்பில்லாமலே மற்ற மனிதர்களை இடிக்கின்றான், கொலையும் செய்கின்றான். மனிதன் மிருகமாக மாறிவிட்டான். பசு சாதுவான பசுவாகவே இருக்கிறது.

பசுவும் கடினமாக உழைக்கும் எருதும், குதிரையும், யானையும், ஆடும், மானும் இன்னும் பல மிருகங்களும் தாவர உணவையே உண்கின்றன. பலமான வேலைகளைச் செய்கின்றன. மனிதன் பலத்துக்காக உண்பதாகப் பொய்யைச் சொல்லிக் கொண்டு நாக்கின் சுவைக்கு அடிமைப்பட்டு வாய்க்கு உருசிக்காக ஆடு, மாடுகளையும் மாமிச உணவுகளையும் சாப்பிடுகின்றான். புத்தி சாதுரியத்தினால் தான் உண்பது சரி எனவும் வாதிக்கிறான். இன்னும் மேலே போய் கடவுள் தன் பக்கம் தான் என்றும் சொல்லித் தன்னையே ஏமாற்றுகின்றான்.

மனிதத்தன்மை, மனிதப் பண்பு, உள்ளவன் தான் மனிதன். மனிதன் எந்த உயிரையும் கொல்ல மாட்டான். மற்றவர் மனம் நோக நடக்க மாட்டான். மாமிச உணவை உண்ணமாட்டான். கோயிலை வழிபட்டு விட்டு நேரே இறைச்சிக் கடைக்குப் போகிறவர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்காக இரக்கப்பட்டு இவர்களுக்கு நல்லறிவைக் கொடுக்கும்படி இறைவனைக் கேட்டுக் கொள்வோம்.

சைவ சமயத்தவர்கள் மாமிசம் புசிக்கக் கூடாது. சொந்த வீட்டில் எதையாவது செய்து பாவத்தைத் தேடிக் கொள்ளாதீர்கள். பொது விருந்துகளில் மாமிசத்தைச் சேர்த்துக் கொள்ளாதீர்கள். சைவ விருந்தாக நடத்துங்கள் என்று பல அன்பர்களிடம் பல சந்தர்ப்பங்களில் பணிவாகக் கேட்டுக் கொண்டேன். எவரும் இணங்கியபாடில்லை. அதற்கேற்ற துணிவும் இல்லை. அதில்லாமல் என்ன விருந்து என்று கேட்டவர்களும் உண்டு.

வேதநூல்கள், சமய நூல்கள், நீதி நூல்கள், புராண இதிகாசங்கள் எல்லாமே உயிர்க் கொலையையும் மாமிச உணவையும் கண்டித்துள்ளன. எல்லா ஜீவராசிகளும் கடவுளுடைய பிள்ளைகள். அவைகளிடம் அன்பு காட்ட வேண்டும்.

*கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும்.*

*தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூனுண்பானை*
*எங்ஙனம் ஆளும் அருள்*

*– திருக்குறள்*

*காப்பது விரதம் (உயிர்வதை செய்யாமல் காப்பது நோன்பாகும்.)*

*– ஆத்திசூடி*

*நோன்பு என்பது கொன்று தின்னாமை*
*(மற்ற உயிர்களைக் கொன்று அதன்புலாலை உண்ணாமல் இருப்பதே விரதம் ஆகும்.)*

*– கொன்றை வேந்தன்*

*புலையும் கொலையும் களவுந்தவிர்*
*(புலால் உணவு, உயிர்க்கொலை, திருட்டுத் தொழில் இவற்றை ஒழித்து விடுவாயாக)*

*– கொன்றை வேந்தன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும்.*

*கொல்லா விரதாங் குவலயமெல்லா மோங்க*
*எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை*
*பராபரமே*

*எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணியிரங்கவும் நின்*
*தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே*

*கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்*
*றல்லாதோர் யாரோ அறியேன் பராபரமே*

*கொலைகளவு கட்காமங்கோபம் விட்டால் அன்றோ*
*மலையிலக்கா நின்னருள்தான் வாய்க்கும் பராபரமே.*

*– தாயுமான சுவாமிகள்*

*கொலை புரிவார் தவிர மற்றரெல்லாம் நமது*
*குலத்தவரே*

*– இராமலிங்க சுவாமிகள்*

*கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்*

*– உலக நீதி*

*ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே*

*– ஆன்றோர் வாக்கு*

## பாவங்கள் ஆவன யாவை ?

கொலை, களவு, கள் குடித்தல், மாமிசம் புசித்தல், பொய் பேசுதல், வியபிசாரம், சூதாடுதல் முதலானவை கொலை பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகும்.

*– ஆறுமுக நாவலர் பெருமான்*

பசுவதை, பகிடிவதை, சித்திரவதை, மனித வதை இப்படி எத்தனையோ வதைகள் உள. எல்லாம் மனித குலத்தால் செய்யப்படுபவை. காரணம் அறியாமை. இவற்றைத் தவிர்ப்பதாயின் அறியாமையில் புதையுண்ட பாமர மக்களிடையே அறிவையும் ஆத்மீகத்தையும், ஞானத்தையும், நீதியையும் புகட்ட வேண்டும். மகாத்மா காந்தியடிகள் மேல்நாடு சென்ற போது தாயார் மூன்று சத்தியங்களைக் கேட்டு வழியனுப்பினார்கள். காந்தியடிகள் மூன்று சத்தியங்களையும் காத்துத் தாய் நாடு திரும்பி சேவை செய்து மகாத்மா எனப் போற்றப்பட்டார்கள். மூன்று சத்தியங்களாவன மது அருந்த மாட்டேன், மாமிசம் புசிக்க மாட்டேன், பிற மாதரை விரும்ப மாட்டேன்.

பெற்றார்களும் ஆசிரியர்களும் பின்வருவன போன்ற சத்தியங்களை மாணவர்களிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மது அருந்த மாட்டோம்
மாமிசம் புசிக்க மாட்டோம்
பிற மாதரை விரும்ப மாட்டோம்
எந்த உயிரையும் கொல்ல மாட்டோம்
பசு வதை செய்ய மாட்டோம்
பகிடி வதை செய்ய மாட்டோம்
பொய் சொல்ல மாட்டோம்
களவு எடுக்க மாட்டோம்
கோபங் கொள்ள மாட்டோம்
தெய்வத்தை இகழ மாட்டோம்
தற்கொலை செய்ய மாட்டோம்

அம்மா என அலற ஆருயிரைக் கொன்றருந்தி இம்மானுடரெல்லாம் இன்புற்றி ருக்கின்றார். அம்மா எனுஞ் சத்தம் கேட்டகன்ற மாதவர்க்கும் பொய் மாநிரயமெனில் புசித்தவர்க்கென் சொல்லுவதே சைவ உணவைப் பேணி சைவசமயத்தைக் காப்போம்.

*இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க*
*ஆனந்தம்*

பொ. கந்தையா காந்தி ஆசிரியர்.

முத்துக்குமார சுவாமி கோயிலடி,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால ஓட்டத்தில் கரைந்துபோன

## கிராமிய வழிபாட்டு விழுமியங்கள்

கிராமிய மக்களின் பக்தியின் ஆழம் பழமை என்ற சொற்பதத்தால் மூடி மறைக்கப்பட்டு நசுக்கப்பட்டிருப்பதை நாம் அறிந்து வெட்கப் படாதிருப்பது விந்தையே. இருப்பினும் காலங்கடந்த ஞானம் எமக்கு வந்திருப்பதும் புதுமையல்ல.

திருகோணமலைக்கு அணிசேர்த்த இடம் முத்தூர். "நித்திலங் கொளிக்கும் கோணமா மலையமர்ந்தார்'' கோண நாயகப் பெருமான் (நித்திலம் – முத்து) இந்த புண்ணிய பூமியில் குறிஞ்சிச் சாயலும் பச்சைக் கம்பளம் போத்த நெல்வயல் வெளிகளும், குளங்களும், நதி, ஓடைகளும், அழகுபடுத்திக் காட்டுகின்ற ''பள்ளிக்குடியிருப்பு'' என்னும் பழமை மிக்க கிராமத்தில் எழுந்தருளி நல்லருள் சுரந்து இன்னருள் பாலிக்கும் விநாயகப் பெருமானின் மகாகும்பாபிசேகம் நடைபெறுவதை நாம் எல்லோருமே அறிந்து உள்ளம் பூரிப்போமாக.

எவ்வாறிருப்பினும் எமது கிராமிய வழிபாட்டு முறைகள் எம்மிலிருந்து தூர விலகிச் சென்று கொண்டிருப்பதை இனிமேலும் நாம் எவரும் அனுமதிக்கக் கூடாது. இவ்வழிபாட்டு முறைகளையும் வேறுவழிபாட்டு முறைகளையும் நாம் எடுத்து நோக்குவோம்.

### நெல் மூட்டுப் பூச்சிக்கு விசிறும் நாகதம்பிரான் தீர்த்தம்

தெய்வத்தால் ஆகாத தொன்றில்லை என்பதற்கு இது ஒரு உதாரணம். நெற்பயிர் பூக்கும் காலத்தில் பூச்சித் தாக்கத்தைக் கட்டுப்படுத்த எமது கிராமிய மக்கள் நாகதம்பிரானுக்குக் கப்பல் வாழைக்குலை நேர்ந்து கட்டுவார்கள். இதை வாழை மரத்தின் தண்டில் வாழை நாரினால் சுற்றிக் கட்டிவிடுவார்கள். காய் முற்றித் தானாகப் பழுத்ததும் அதனை வெட்டி சுத்தமான பால் பொங்கல் பொங்கி வாய்கட்டிப் பூசை செய்து மிகப் பக்தி முக்தியாகத் தீர்த்தம் தயாரித்து வயலுக்குக் கொண்டு சென்று விசுறுவார்கள். விசிறியதும் மூன்று நாட்களுக்கு வயல்பக்கம் செல்லாதிருப்பர். பூச்சித் தாக்கமும் கடவுள் நம்பிக்கையின் பயனால் அற்றுப் போகின்றது. இன்று பூச்சி நாசினி விசிறினாலும் பலன் கிட்டுவதில்லை.

### பன்றி, காட்டுமாடுகள் வராது தடுக்கும் வன்னியத்தெய்வம்:

காட்டு விலங்குகள் நெல் வயலைத் தாக்காதிருக்க பொங்கற் பானையொன்றால் நெல் நிறைத்து நேர்த்தி வைக்கப்படும். பின் வயல் விளைந்ததன் பின் அந்த நெல்லை வீட்டில் வைத்துக் குற்றாமல் வேறு ஓர் இடத்தில் வைத்து ஆண்களே குற்றி அரிசியாக்கி அதனைப் பழங்களோடு எடுத்துக் கொண்டு அதற்குப் பூசை செய்யும் பூசகரோடு யாருக்கும் தெரியாமல் நடுக்காட்டுக்கு எடுத்துச் சென்று நல்ல பெரிய பாலை மரத்தடியில் மடைப்பந்தல் போட்டு அகப்பை போடாமல் பன்னைக் குழை தடவி பால் பொங்காமல் பொங்கி முக்காலியில் திறந்து வைத்துப் பூசை செய்து அங்கேயே மிகுதியில்லாமல் சாப்பிட்டு விட்டு வருகின்ற அந்த வாசனை மிகுந்த பால் அமுதை யாரும் இன்று நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது.

### காவல் தெய்வம் வைரவர் மடை :-


காக்கும் தெய்வம் வைரவர்க்கு வருடம் ஒருமுறை மடை போடுதல் ஒரு முறையே. வைரவ சுவாமிக்கு வடை, கஞ்சாறொட்டி, வாழைப்பழம், பால்ப்புக்கை வைத்து கற்பூர தீபம் காட்டுதலோடு சுவாமி ஆடிக் கட்டுக் கேட்டு நினைத்த காரியம் கேட்டல் போன்றவற்றையும் செய்து வணங்கி நிற்றல் இம் முறைகளில் ஒன்றாகவுள்ளது.

### உத்தியாக்களுக்கு விளக்கடியில் வைத்துப் பக்தி கொள்ளல்:

சின்னக் குழந்தைகளுக்குக் காற்றணைவு, சிறு காய்ச்சல் போன்றவை ஏற்படுகின்ற பொழுது எமது இறந்து போன மூதாதையர்கள் ஆசை கொண்டமையினால் தான் இவ்விதம் நடைபெறுகின்றது எனக்கண்டு அவர்களுக்கு வருடம் ஒருமுறை விரும்பிய உணவு வகை, பழவகை என்பனவற்றை வீட்டுக்குள் வைத்துவிட்டு அறையைப் பூட்டிவிடுவார்கள். அதன் பிற்பாடு எவ்வளவு நேரத்தில் அந்தப் படையல் திறந்தெடுக்கப்படுமென்றால் பல்லி சொல்லும். அதன் பிற்பாடு அறையைத் திறந்து எடுத்து உண்பர். இதுவும் நம் முன்னோரின் மேல் உள்ள பக்தியே. இன்று இவையெல்லாம் அருகிப் போனதினாலேயே உயிருடனிருக்கும் மனிதனை மதியாத்தன்மை வளர்ந்துள்ளது.

க. ஜெயநாதன்,
*அதிபர், சம்பூர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா கும்பாபிஷேகம் சம்பந்தமான கிரியைகள் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்

மகா கும்பாபிஷேகத் தினத்தன்று சுவாமி ஸ்ரீ தந்திரதேவா மகராஜ் அவர்கள் பக்த கோடிகளுக்கு அருளுரை வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.





மகா கும்பாபிஷேகப் பிரதம குரு சிவஸ்ரீ சீத்தாராமக் குருக்கள் ஆசியுரை வழங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நன்றிகள் .....

★ மகா கும்பாபிஷேகத்திற்குப் பல வழிகளிலும் உதவிய அனைத்து அன்பர்களுக்கும்,

★ சகல விதமான ஆன்மீக ஆலோசனைகள், ஆசியுடன் வழிகாட்டல்கள் மற்றும் பல்வேறு உதவிகள் வழங்கியருளிய ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா மகராஜ் அவர்களுக்கும்,

★ ஆசியுரை வழங்கியும் வாழ்த்துரைகள் வழங்கியோருக்கும் கட்டுரைகள், கவிதைகள் வழங்கியவர்களுக்கும்,

★ கும்பாபிஷேக பிரதம குரு, குருமார்கள் ஆலய குருக்கள் அனைவர்க்கும்,

★ சிற்பாசாரியார்கள், கட்டடக் கலைஞர்கள், ஓவியர்கள் அனைவர்க்கும்,

★ சிறப்பு மலரைப் பதிப்பித்துதவிய கொழும்பு, யுனி ஆர்ட்ஸ் அச்சக உரிமையாளர், பணியாளர்களுக்கும்,


★ பணம், பொருள், சரீர உதவிகள் வழங்கி இக் கும்பாபிஷேகம் சிறப்புற நிறைவேற உதவிகள் புரிந்த அனைவர்க்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



நன்றி

சி. விஜயராசா
*செயலாளர்*
ஆலய பரிபாலன சபை
பள்ளிக்குடியிருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed By Unie Arts (Pvt) Ltd. T. P 330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org